Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, MARCH 07, 2023

செவ்வாய்க்கிழமை மார்ச் 07, 2023 | ஒளி: 08 கதிர்: 223 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# தங்கம் விலை குறைகிறது



ஐக்கிய அமெரிக்க டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்து, இலங்கை ரூபாய் வலுவடைந்து வருவதால் தங்கத்தின் விலை வெகுவாக குறைவடைந்துள்ளது என அகில இலங்கை தங்க ஆபரண வர்த்தக சங்கத்தின் பொருளாளர் ராமன் பாலசுப்ரமணியம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## மீளக் கட்டியெழுப்ப ஒத்துழைப்பு நல்கவும்

### எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கல் அப்பிள்டனுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான சந்திப்பொன்று கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (06) இடம்பெற்றது.

தொடர்ச்சி P2




ஜெனீவாவில் 8, 9ஆம் திகதிகளில்

# காலாந்தர மீளாய்வு

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் கீழான இலங்கையின் 6 ஆவது காலாந்தர மீளாய்வு 2023 மார்ச் 8 மற்றும் 9ஆம் திகதிகளில் ஜெனீவாவில் நடைபெறவுள்ளது.

தொடர்ச்சி P2



# மந்திரிமனைக்குள் நுழையத் தடை

நல்லூரில் அமைந்துள்ள மந்திரிமனைக்குள் நுழையவேண்டாம் என தொல்பொருள் திணைக்களத்தால் அறிவித்தல் ஒன்று அங்கு ஒட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இராசதானியை ஆண்ட சங்கிலி மன்னனது மந்திரிமனை நல்லூரில் சட்டநாதர் சிவன் கோவிலுக்கு அருகில் அமைந்துள்ளது.

அந்தக் கட்டடம் உடைந்து விழும் நிலையில் உள்ளது. அதற்கு முட்டுக்கொடுத்து கம்பிகள் நடப்பட்டுள்ளன. இதனால் அதற்குள் யாரையும் நுழையவேண்டாம் என்று தொல்பொருள் திணைக்களம் அறிவித்துள்ளது.

## 'பூரு மூனா'வுக்கு அடைக்கலம் கொடுத்த தம்பதியினர் கைது



ஹங்வெல்ல பகுதியில் உள்ள உணவகம் ஒன்றின் உரிமையாளரை கொலை செய்தமை உட்பட 13 கொலைகளுடன் தொடர்புடைய, 'பூரு மூனா' என்ற சந்தேக நபருக்கு அடைக்கலம் கொடுத்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் பண்டாரகம பிரதேசத்தை சேர்ந்த கணவன் - மனைவி கைது செய்யப்பட்டுள்ளனர்.

'பூரு மூனா' என்ற சந்தேக நபர், போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி டுபாய் செல்வதற்காக பெப்ரவரி 24 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சென்றிருந்தார்.

தொடர்ச்சி P2



## "குறைப்போமே தவிர கூட்டவே மாட்டோம்"

"பாண், பணிஸ் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளை குறைப்போமே தவிர, இன்னும் அதிகரிப்பதற்கான எவ்விதமான தயார் நிலையிலும் நாங்கள் இல்லை" எனத் தெரிவித்த அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்தன, ஆகக் குறைந்தது பாண் இறாத்தல் ஒன்றின் விலையை 100 ரூபாய் வரையிலும் குறைப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

தொடர்ச்சி P2



# மாத்தளை மாசிமகம்

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிம பஞ்சரத பவனி, நேற்று (06) வெகுசிறப்பாக இடம்பெற்றது.



## பேருவளை கோடீஸ்வரர் போதைப்பொருளுடன் கைது

துசித குமார சில்வா

பேருவளை மீன்பிடி துறைமுகத்தின் ஊடாக கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்கு ஐஸ், ஹெரோய்ன், கேரள கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்களை நீண்ட காலமாக விற்பனை செய்துவந்த கோடீஸ்வரர் நேற்று (06) கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



## ஓட்டுநர்கள் பற்றாக்குறையால் தண்டவாளத்தில் நிற்கும் ரயில்கள்

ஓட்டுநர்கள் பற்றாக்குறை காரணமாக, நீண்ட தூரம் சேவைகளில் ஈடுபடுத்தவேண்டிய ரயில்களை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று ரயில்வே தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் 60 வயதுக்கு மேற்பட்ட ஒய்வு பெற்ற ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்த பொதுச் சேவை ஆணைக்குழுவிடம் அனுமதி கோரப்பட்டதாகவும் ஆனால் இதுவரையில் திருப்திகரமான மறுமொழி எதுவும் கிடைக்கவில்லை என்றும் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மருந்து விலை அதிகரிப்பால் விபரீத முடிவு எடுத்த தாய்

தனது உயிரை மாய்த்துக் கொள்ளும் நோக்கில், தனது இரண்டு மாற்றுத் திறனாளி மகன்களுடன் தாயொருவர் கிணற்றில் குதித்துள்ள சம்பவம் கெப்பிதிகொல்லாவ, கணுகஹாவெவ பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (05) இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

# அந்நிய செலாவணிக்கு தட்டுப்பாடு இல்லை



நாட்டில் அத்தியாவசிய பொருட்களுக்கான அந்நிய செலாவணிக்கு தற்போது தட்டுப்பாடு இல்லையென இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைமையில், அத்தியாவசியப் பொருட்களுக்கு அந்நிய செலாவணி தட்டுப்பாடு இல்லை. எண்ணெய், எரிவாயு, நிலக்கரி,

தொடர்ச்சி P2

## அரசியலமைப்பு சபை கூடுகிறது

தேர்தல் ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அரசியலமைப்பு சபை எதிர்வரும் 9ஆம் திகதி மீண்டும் கூடும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

உறுப்பினர்கள் நியமனம் தொடர்பான சில முக்கிய தீர்மானங்கள் அதன்போது எடுக்கப்பட உள்ளதாகவும் சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.

# உறவைக் கட்டியெழுப்ப திருவிழா வழிசமைக்கிறது



அயல்நாடுகளைச் சேர்ந்த மீனவ சமூகங்களிடையிலான நெருக்கமான உறவைக் கட்டி எழுப்புவதற்கு கச்சதீவு போன்ற திருவிழா வழிசமைக்கின்றது என கொழும்பில் உள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

2023 மார்ச் 03, 04 ஆம் திகதிகளில் நடைபெற்ற கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த திருவிழாவில் மீனவர்கள், மதகுருமார்கள் உட்பட கிட்டத்தட்ட 2,500 இந்திய யாத்திரிகர்கள் கலந்து கொண்டிருந்தனர். வருடாந்தம் நடைபெறும் இத்திருவிழாவில் கிட்டத்தட்ட 3,000க்கும் அதிகமான இலங்கை யாத்திரிகர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இத்திருவிழாவில் பங்கேற்பதற்காக 2023 மார்ச் மூன்றாம் திகதி கச்சதீவை வந்தடைந்த யாத்திரிகர்களை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வரவேற்றார். அன்றைய தினம் இத்திருவிழாவை முன்னிட்டு விசேட பிரார்த்தனைகளும் மாலை நேர திருப்பலியும் இடம்பெற்றிருந்தன.

தொடர்ச்சி P2



## கைதடியில் கடத்தப்பட்ட வேன் வேம்பிராய் மயானத்தில் மீட்பு

நிதர்ஷன் வினோத்

யாழ்.கைதடியில் கடத்தப்பட்ட ஹயஸ் ரக வாகனம், மீசாலை வேம்பிராய் பொது மயானத்துக்கு அருகாமையில் அநாதரவாக விடப்பட்டிருந்த நிலையில் நேற்று (06) மீட்கப்பட்டுள்ளது.

யாழ்.கைதடி மேற்கில் விற்பனைக்காக விடப்பட்டிருந்த ஹயஸ் வாகனத்தைப் பார்வையிட வந்த நபர்கள், அதை ஓடிப் பார்க்கவேண்டுமென கூறியுள்ளனர்.

தொடர்ச்சி P2

## மீளக் கட்டியெழுப்ப ஒத்துழைப்பு நல்கவும்

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்கள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான ஒத்துழைப்பை நல்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் நியூசிலாந்து உயர்ஸ்தானிகரிடம் கோரிக்கை விடுத்தார்.

இலங்கையில் வறுமையை ஒழிக்க நியூசிலாந்து அரசாங்கத்தின் ஆதரவை கோரிய எதிர்க்கட்சித் தலைவர், நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையின் முக்கியத்துவம் குறித்தும் சுட்டிக்காட்டினார்.

இந்நாட்டு அரசியலில் தனித்துவ அடையாளத்தை பதித்து எதிர்க்கட்சியின் அரசியல் கட்சி என்ற வகையில் பிரபஞ்சம் மற்றும் மூச்சு வேலைத்திட்டங்கள் மூலம் நாட்டுக்கு பெறுமதி சேர்த்ததை எதிர்க்கட்சித் தலைவரால் நினைவு கூரப்பட்டதோடு, நியூசிலாந்து உயர்ஸ்தானிகரின் பாராட்டும் கிடைக்கப் பெற்றது.

## குறைப்போமே தவிர கூட்டவே மாட்டோம்

இதற்காக அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்த்து இருப்பதாகவும், தற்போது முடங்கி கிடக்கின்ற கைத்தொழிலை மீண்டும் மீட்டெடுக்க வேண்டுமாயின் பாண், பணிஸ் உள்ளிட்ட உற்பத்திப் பொருட்களின் விலைகளை குறைத்தால் மட்டுமே அதனை செய்யமுடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஓர் இறாத்தல் பாணின் விலை 150 ரூபாய் முதல் 170 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்படுகின்றது. சில இடங்களில் 180 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவித்த அவர், இந்த விலை அதிகரிப்பை நுகர்வோரால் தாங்கிக்கொள்ள முடியாது உள்ளது. அதனால், பாண், பணிஸ் விற்பனை 20 முதல் 25 சதவீதம் வரையிலும் குறைந்துள்ளது என்றார்.

மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டமை பேக்கரி கைத்தொழிலுக்கு பாரிய அழுத்தங்களை கொடுத்துள்ளது. இதனால் இந்தத் துறையும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

பல்வேறான பிரச்சினைகள் காரணமாக 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

# காலாந்தர மீளாய்வு

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையை 1980 ஜூன் 11ஆம் திகதி இலங்கை ஏற்றுக்கொண்டது. உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதோடு, உடன்படிக்கையின் அனைத்து அரச தரப்பினரும் குழுவிற்கு அவ்வப்போது அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கும், அவ்வப்போது மீளாய்வுகளில் பங்கேற்பதற்குமானதொரு தன்னார்வக் கடமையை மேற்கொண்டுள்ளது.

அதன்படி, 1983, 1990, 1994, 2003, 2013ஆம் ஆண்டுகளில் இலங்கை 5 காலாந்தர அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளதுடன், 1983, 1991, 1995, 2003, 2014ஆம் ஆண்டுகளில் 5 மீளாய்வுகளில் பங்கேற்றுள்ளது.

ஆறாவது அறிக்கை 2019 பெப்ரவரி 22ஆம் திகதி மனித உரிமைகள் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. மனித உரிமைகள் குழு என்பது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிக்கும் 18 சுயாதீன நிபுணர்களைக் கொண்ட ஓர் அமைப்பாகும். அனைத்து நாடுகளின் மீளாய்வுகளும் இக் குழுவால் நடத்தப்படுகின்றது.

இலங்கையின் வேண்டுகோளுக்கு இணங்க, ஆறாவது மீளாய்வு கலப்பு வடிவத்தில், ஜெனீவாவிலுள்ள ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி ஹிமாலி அருணதிலகவின் தலைமையில் நடத்தப்படவுள்ளது.

இலங்கை குழுவில் ஜனாதிபதி செயலகம், பொதுப் பாதுகாப்பு அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, ஜெனீவாவில் உள்ள ஐ.நா. வுக்கான இலங்கையின் நிரந்தரத் தூதரகம், நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு, சுகாதார அமைச்சு, சிறைச்சாலைகள் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் போன்றவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கொழும்பில் இருந்து சிரேஷ்ட அதிகாரிகள் மீளாய்வில் இணைந்துகொள்வர்.

2023 பெப்ரவரி 27 முதல் மார்ச் 24 வரை நடைபெறவுள்ள மனித உரிமைகள் குழுவின் 137 ஆவது அமர்வின் போது, இலங்கைக்கு மேலதிகமாக, எகிப்து, துர்க்மெனிஸ்தான், சம்பியா, பெரு, பனாமா ஆகிய நாடுகளும் மீளாய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளன.

> **சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையை 1980 ஜூன் 11ஆம் திகதி இலங்கை ஏற்றுக்கொண்டது. உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதோடு, உடன்படிக்கையின் அனைத்து அரச தரப்பினரும் அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கும், மீளாய்வுகளில் பங்கேற்பதற்குமான கடமையை கொண்டுள்ளது**

# தங்கம் விலை குறைகிறது



கொழும்பு - செட்டியார் தெருவில் சனிக்கிழமை (04) அன்று 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 1 இலட்சத்து 70 ஆயிரத்து 500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

கடந்த காலங்களில் தங்கத்தின் விலை மிக வேகமாக அதிகரித்திருந்தது, இதன்படி, 24 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை ஒரு இலட்சத்து 80 ஆயிரத்திற்கும் மேல் பதிவாகியிருந்தது.

இந்த நிலையில், கடந்த சில நாள்களாக இலங்கை ரூபாயின் பெறுமதி சடுதியாக அதிகரித்த நிலையில், தங்கத்தின் விலையிலும் அது தாக்கம் செலுத்தியுள்ளது.

## 'பூரு மூனா'வுக்கு அடைக்கலம் கொடுத்த தம்பதியினர் கைது

இதன்போது, குடிவரவு - குடியகல்வு திணைக்கள அதிகாரிகள், இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து, சந்தேகநபர் விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பின்னர், சந்தேக நபர் பொலிஸ் நிலையத்தில் இருந்து தப்பிச்சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், ஹங்வெல்ல உணவகத்தின் உரிமையாளரின் கொலையின் பின்னர், தாம் பண்டாரகம, மில்லனிய மல்வத்த வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் பதுங்கியிருந்ததாக சந்தேக நபர் கைது செய்யப்படும் போது வாக்குமூலம் அளித்துள்ளார்.

அதன்படி, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததில், 'பூரு மூனா'வுக்கு அடைக்கலம் கொடுத்த வீட்டின் கணவன், மனைவி இருவரும் அப்பகுதியில் இருந்து தப்பிச் சென்றது தெரியவந்தது.

பொலிஸாரின் மேலதிக விசாரணைகளின் விளைவாக, தப்பியோடிய சந்தேக நபர், கணவன் மற்றும் மனைவி நுவரெலியா பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று (05) கைது செய்யப்பட்டுள்ளனர்.

> **'பூரு மூனா'வுக்கு அடைக்கலம் கொடுத்த வீட்டின் கணவன், மனைவி இருவரும் அப்பகுதியில் இருந்து தப்பிச் சென்றதை அடுத்து, பொலிஸாரின் மேலதிக விசாரணைகளின் பேரில், நுவரெலியா பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்**

35 வயதுடைய சந்தேக நபர் இலங்கை கடற்படையைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது. தொடர்ந்து அதிகரித்துக் சந்தேக நபர், சம்பவத்தின் பின்னர் கடமைக்கு சமூகமளிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# பேருவளை கோடீஸ்வரர் போதைப்பொருளுடன் கைது

'டொக்கன் சுரேஸ்' என்றழைக்கப்படும் அந்த நபர், ஆறு இலட்சம் ரூபாய் பெறுமதியான போதைப்பொருட்களுடன் பேருவளை விசேட பொலிஸ் பிரிவின் அதிகாரிகளால், கைது செய்யப்பட்டார்.

மாகல்கந்த பிரதேசத்தில் உள்ள அவருடைய வீட்டை சோதனைக்கு உட்படுத்திய போது, அங்கிருந்து போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேக நபரை, களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அந்தப் பிரிவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மருந்து விலை அதிகரிப்பால் விபரீத முடிவு எடுத்த தாய்

குறித்த சம்பவத்தில் மகன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் மற்ற மகனும் தாயும் கவலைக்கிடமான நிலையில் கெப்பதிகொல்லாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கெப்பதிகொல்லாவ, கணுகஹவெவ பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட சுனில் சாந்தகே ரவிந்து மிஹிரங்க என்ற 21 வயது இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன் குறித்த இளைஞரின் 48 வயதான தாயும் ஒன்பது வயதுடைய மகனும் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்த குறித்த இளைஞர் முற்றாக ஊனமுற்றவர் என்றும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அவருடைய சகோதரன் காது கேளாதவர் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக மாற்றுத்திறன் கொண்ட இரு பிள்ளைகளுக்கும் தேவையான மருத்துவ வசதிகளை செய்ய முடியாததால் குறித்த பெண் தற்கொலை செய்ய கிணற்றில் குதித்துள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சிவில் பாதுகாப்புப் படைவீரரான குறித்த பிள்ளைகளின் தந்தை நேற்று அதிகாலை வேலைக்குச் சென்றுவிட்டு 10 மணியளவில் வீடு திரும்பிய போது மனைவி மற்றும் பிள்ளைகளைக் காணாததால் சுற்றும் முற்றும் தேடியுள்ளார். அப்போது மனைவியைக் கண்டவர் பிள்ளைகள் கிணற்றில் கிடப்பதை பார்த்துள்ளார். சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## ஓட்டுநர்கள் பற்றாக்குறையால் தண்டவாளத்தில் நிற்கும் ரயில்கள்

60 வயதுக்கு மேற்பட்ட 20 ற்கும் அதிகமான ஓட்டுநர்கள் ஓய்வு பெற்றமையே இந்த நிலைக்குப் பிரதான காரணம் எனவும் இது தொடர்பாக அரச அதிகாரிகள் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் கூறினார்.

அநுராதபுரம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, பதுளை ஆகிய இடங்களுக்கு நீண்ட தூர சேவையில் ஈடுபடும் ரயில் சேவைகள், சரக்கு மற்றும் எரிபொருள் போக்குவரத்து ரயில்கள், திருகோணமலையில் இருந்து கோதுமை மாவை ஏற்றி வரும் ரயில்கள் இரத்து செய்யப்படுவதாகவும், மேலும் எதிர்காலத்தில் பல ரயில்களை ரத்து செய்ய நேரிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அந்நிய செலாவணிக்கு தட்டுப்பாடு இல்லை

அத்தியாவசிய மருந்துகள் என அனைத்துப் பொருட்களுக்கும் தேவையான அந்நிய செலாவணியை தற்போது மத்திய வங்கி வழங்குவதில்லை என்றார்.

வங்கி முறை மூலமாகவே தற்போது வழங்கப்படுகின்றது. மற்றும் அதன் வைப்புத் தொகை இப்போது சுமார் 600 மில்லியனாக அதிகரித்துள்ளது. தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே செல்லும் என்றும் அவர், நேர்காணலின் போது அறிவித்துள்ளார்.

# உறவைக் கட்டியெழுப்ப திருவிழா வழிசமைக்கிறது

அதனைத் தொடர்ந்து 2023 மார்ச் 04ஆம் திகதி இந்திய மற்றும் இலங்கை மதகுருமாரால் மீனவர்களின் இரட்சகரான புதுவா புனித அந்தோனியாருக்காக விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து பாரம்பரிய திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பெருவிழாவிற்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் வகையில் இந்திய- இலங்கை யாத்திகர்களின் கைவினைப் பொருட்களை விற்பனை செய்வதற்கான அல்லது காட்சிப்படுத்துவதற்கான கூடங்களும் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

இவ்வருடத்தின் திருவிழாவுக்கு இந்திய அரசாங்கம் நிதி ஆதரவினை வழங்கியிருந்தது. யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய கொன்சுல் ஜெனரல் ராகேஷ் நடராஜ், கொன்சலேட் அலுவலக அதிகாரிகள் இவ்விழாவிற்காக விசேட விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தார்கள் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடாந்த திருவிழாவில் ஒவ்வொரு வருடமும் இந்திய யாத்திரிகர்கள் மிகுந்த உத்வேகத்துடன் கலந்துகொள்கின்றனர். கடந்த இரு வருடங்களாக கொவிட் 19 காரணமாக இத்திருவிழா ஏற்பாடுகளிலும் தாக்கங்கள் ஏற்பட்டிருந்தன. இத்திருவிழாவின் மூலமாக இந்திய - இலங்கை மக்களிடையிலான வலுவான தொடர்புகள் சுட்டிக் காட்டப்படுவதுடன் கடல் மார்க்கமாக, மிகவும் நெருக்கமான இந்த அயல்நாடுகளைச்சேர்ந்த மீனவ சமூகங்களிடையிலான நெருக்கமான உறவைக் கட்டி எழுப்புவதற்கும் இவ்வாறான திருவிழா வழிசமைக்கின்றமை குறிப்பிடத்தக்கது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.



## கைதடியில் கடத்தப்பட்ட வேன் வேம்பிராய் மயானத்தில் மீட்பு

வாகனத்துக்கான சாவியை வாங்கி, இயக்கிய அவர்கள், வாகனத்தை ஓட்டி பார்த்துள்ளனர். எனினும், நீண்டநேரம் ஆகியும் அவர்கள் திரும்பவே இல்லை. இந்தச் சம்பவம் சனிக்கிழமை (04) இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பில் வாகனத்தின் உரிமையாளரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே குறித்த ஹயஸ் வாகனம் மிசாலை வேம்பிராய் பொது மயானத்துக்கு அருகாமையில் இலக்கத் தகடுகள் அகற்றப்பட்டு, அநாதரவாக விடப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது என தெரிவித்த சாவகச்சேரி பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.



# பரதேசி




சுப்பிரமணியன் ஜனுர்ஷா

(ஊடக கற்கைகள் துறை, 2ஆம் வருடம், யாழ்.பல்கலைக்கழகம்)


சினிமா துறையானது இன்றளவும் எமது சமூகம் மத்தியில் எமது சமூகம் மத்தியில் தனி களத்தினை தக்க வைத்துள்ளது என்பது மறுக்கப்படாத உண்மையே. இற்றைக்கு கால ஓட்டத்தில் வேகமாக பயணிப்பதை கூர்ந்து கவனித்த சினிமாத்துறை ஓட்டப் பந்தயத்தின் போது ஒதுக்கி வைக்கப்பட்ட சமூக பிரச்சினைகளை மறந்து மிதித்து ஓடுகிறது. அவ்வாறு அல்லாமல் சினிமா துறையில் தனக்கான தனிப்பாணியை கொண்டுள்ள இயக்குனர் பாலா அவர்களின் இயக்கத்தில் வெளிவந்த சமூக பிரச்சினையை பேசுகின்ற திரைப்படம் தான் பரதேசி.

2013 இல் மார்ச் 13ம் திகதி வெளிவந்த பல வலிகளை சுமந்தவர்களின் உண்மை கதையை சித்தரித்து காட்சிப்படுத்திய திரைப்படம் 'பரதேசி'. திரைப்படத்தில் கதை, திரைக்கதை, வசனம் என அனைத்திலுமே இயக்குநர் பாலா முழு பங்களிப்பினையும் செலுத்தியுள்ளார். அத்தோடு; எல்லா கதாப்பாத்திரங்களும் படத்தின் கருவோடு ஒன்றி செயற்பட்டுள்ளமையினை படைப்பில் பார்க்க முடிகிறது. இப்படத்தில் அதர்வர் அப்பாவி தனமான வேடத்தில் ஒட்டுப் பொறுக்கி (ராசா) என்ற கதாப்பாத்திரத்தில் நடித்திருக்கிறார். துருதுருவான கதாபாத்திரமாக அங்கம்மா என்ற பெயரில் வேதிகா நடித்திருப்பதோடு, தனுஷ்கா, ஜெர்ரி, ரித்திகா போன்றோர் துணை கதாபாத்திரங்களாக இணைந்து திரைக்கதைக்கு உயிர்கொடுத்துள்ளனர்.

திரைக்கதையானது உண்மையிலேயே சோகத்தின் விளிம்பை தொட்டுவிட்டது. இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்னர் அப்பாவி ஏழைத் தமிழர்கள் ஆங்கிலேயர்களால் தேயிலை தோட்டங்களில் எப்படி உரமாக மாறினார்கள். இன்று நாம் கதகதப்பாக அருந்தும் தேநீருக்காக அன்று இரத்தம் சிந்திய ஏழை மக்களின் உண்மைக் கதையான அவல வாழ்க்கையை கூறுவது தான் இந்த படம். திரைப்படமானது, மருத்துவராக பணியாற்றிய பி.எச்.டானியல் எழுதிய '*the Red Tea*' என்ற ஆங்கில நாவலை தழுவியதாக வேறொரு பார்வையில் தேயிலைத் தோட்ட மக்களின் துன்பியலை எடுத்துக்காட்டுகின்றது.

1939 காலப்பகுதியில், இயற்கையோடு வாழும் கிராமத்து மக்களின் பேச்சு வழக்கு சாயலோடு திரைப்படம் தொடங்குகின்றது. திருப்புமுனையாக மக்கள் தேயிலைத் தோட்டங்களுக்கு வேலைக்காக புலம்பெயருல் காட்சி காட்டப்படுகின்றது. கதையின் இறுதிவரை அங்கம்மா குழந்தையுடன் கிராமத்தில் தனித்து வாழ்கிறாள். அதேசமயம் ராசா கொடூரபுரத்திலிருந்து கிராமத்துக்கு மீள்வானா என்ற பதற்றத்தையும் எதிர்பார்ப்பையும் படம் தொடர்ந்து தந்து கொண்டேயிருந்தது. இந்தக் கேள்வி படத்தை இறுதிவரை பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தை தூண்டுவதாகவும் அமைந்துள்ளது.

இத்திரைப்படத்தின் இறுதி முடிவில் அங்கம்மா குழந்தையுடன் தேயிலைத் தோட்டத்திற்கு அடுத்த கொத்தடிமை வரிசையில் வருகிறாள். அங்கம்மாவைப் பார்த்த ராசா இன்பத்தில் சற்று நேரம் அவளை கட்டி அணைத்து அழ மறுப்பக்கம் 'நரக குழியில வந்து விழுந்துட்டியே அங்கம்மா' என்று கதறி அழும் காட்சி தேயிலைத் தோட்ட கொத்தடிமைகளின் வாழ்க்கை என்றுமே ஒரு முடிவிலியாக தொடரும் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. திரைப்படத்தில் ஏற்கெனவே கொத்தடிமைகளாக்கப்பட்ட மக்களுக்கு ஏற்பட்ட நிலைதான் இனி வரும் மக்களுக்கும் ஏற்படும் என்பது விளங்கிக் கொள்ளக்கூடியதாக அமைந்துள்ளதால் இப்படம் மூடிய முடிவாக இனி என்ன நேரும் என்ற ஐயப்பாட்டையும் தருகின்றது.

'ஒட்டுப் பொறுக்கி' என்ற கதாபாத்திரம் வறுமையில் உள்ளவராகவும் தாழ்த்தப்பட்ட சாதியினராகவும் அப்பாவி தனமாகவும் படைக்கப்பட்டுள்ளார். சோறு கிடைக்காமல் அவர் கடும் பசியுடன் அழுவது, பாழும் கொத்தடிமை குழியில் மனைவியும் மகளும் சிக்கிக் கொண்டதை நினைத்து கதறுவது, ஒவ்வொரு வருடமும் கூலி மறுக்கப்பட்டு பாவக்குழியில் மீண்டும் திரும்புவது என மொத்த தாபத்தையும் அவரின் நடிப்பு வெளிப்படுத்துகின்றது. பாட்டியாக நடித்துள்ளவர் ஒரு காட்சியில் 'பஞ்சாயத்தில் கற்பூரத்தை அணைத்துவிட்டு சத்தியம் எல்லாம் பண்ணியாச்சு போ போ' என்று அசட்டையாக சொல்லும் காட்சியானது கிராமத்து பாட்டியை அவ்வாறே தனது நடிப்பில் கொண்டு வந்துள்ளதையே காட்டுகின்றது.

இத்திரைப்படம் ரசித்துப் பார்க்கத்தக்க படமல்ல என்றாலும் கொட்டும்பனி, அட்டைக்கடி, அடைமழை, கங்காணியின் உறிஞ்சல், பெண்களுக்கு எதிரான வெள்ளைக்காரனின் பாலியல் பலாத்காரம், கொள்ளை நோய், தப்பிக்க முயற்சித்து தண்டனைக்கு உள்ளாகும் அவலம், மதப் பிரசாரம் செய்யும் வைத்தியர்கள் என ஒன்றன் பின் ஒன்றாக சோகம் என தேயிலை தோட்டங்களின் பின்னால் கொடூரமாக சிந்த வைக்கப்பட்ட இரத்த துளிகளின் பதிவாக அவர்களின் துன்பியல் வாழ்க்கை பதிவாக்கப்பட்டுள்ளமை பாராட்டத்தக்கது.

இந்தத் திரைப்படத்தில் வைரமுத்து வரிகளுடன் ஜி.வி பிரகாஷ் பாடல்களுக்கு இசையமைத்துள்ளார். ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் பின்னணி இசையானது படத்தின் ரணங்களை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. 'செங்காடே...' என்ற பாடல் மற்றும் அதர்வா தப்பி ஓடும் போது வரும் பின்னணி இசை மற்றும் தன்ஷிகா கொள்ளை நோயால் இறந்த போது



ஒலிக்கும் இசை சோகத்தால் காதுகளை பதம் பார்க்கின்றது.

படத்தில் என்ன தான் பாலா நம் மக்களின் சோகத்தை அப்படியே திரைக்கு கொண்டு வந்திருந்தாலும் சில விடயங்களை மறந்துவிட்டார் போலும். படத்தின் முதல் காட்சியில் பெரியப்பா இறந்து விட்டதாக அவரின் பிணத்தை மறைத்து திருமணம் முடிவு பெறுவதாக ஒரு காட்சி இருக்கும். ஆனால் இறுதியில் பெரியப்பாவின் பிணத்தை என்ன செய்தார்கள் என்று எந்த இடத்திலும் பதிவு செய்யப்படவில்லை. நல்ல உள்ளம் கொண்ட ராசாவை முட்டாளாக காண்பித்தமை புரியாத புதிராகவே உள்ளது.

மற்றபடி அன்றைய சமூகநிலையை பாலா கனகச்சிதமாக சித்திரித்துள்ளார். நம்முடன் வாழ்ந்த மேல் சாதியினரும் எம்மை பதம் பார்த்துள்ளனர் என்பதையும் பாலா வட்டம் போட்டு காட்டியுள்ளார். இவ்வாறாக பல தேயிலைத் தோட்ட மக்கள் இந்தியாவில் இரத்தம் சிந்தியதை படமாக்கியதுடன் நல்ல சமூக கருத்தையும் திரைப்படம் தந்துள்ளது. இதே அவலத்தை இன்றுமே இலங்கையிலும் எங்கள் சொந்தங்கள் அனுபவிக்கிறார்கள். அவர்களின் துன்பியல் வாழ்க்கையும் வெளி உலகத்திற்கு கொண்டுவரப்படாத மறைக்கப்பட்ட அவலமாகவே காணப்படுகின்றது. இன்றைய ஈழ சினிமாத்துறையிலும் இத்திரைப்படத்தை போன்ற கதைக் கருவை ஒட்டியதான தேயிலை தோட்ட தொழிலாளிகளின் துயரம் பேசும் திரைப்படங்களும் திரைக்குள் வரவேண்டும். அவர்களின் குரலாக திரைப்படங்கள் வெளியிடப்பட்டு தோட்ட தொழிலாளிகளின் துயரத்தை துடைப்பதற்கான ஒரு வெளியை அமைத்துக் கொடுக்க வேண்டும்.







## மாசிமகம்

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக பஞ்சரத பவனி, நேற்று (06) வெகுசிறப்பாக நடைபெற்றது.















## வருடாந்த திருவிழா

புத்தளம், மணல்குன்று, பொம்மக்கன் கோவிலின் வருடாந்த திருவிழாவில், பக்தர்கள் பால்குட பவனியில் கலந்து கொண்டுள்ளதை படங்களில் காணலாம்.

படங்கள்: எம்.யூ.எம் சனூன்

## தீர்த்த உற்சவம்

ஆலங்கேனி விநாயகர் கோவில் தீர்த்த உற்சவம் நேற்று (06) நடைபெற்றது. இதன்போது சுவாமி வீதி வலம் வந்து, தீர்த்தக்கரைக்கு செல்வதை படங்களில் காணலாம்.

(படங்கள்: அ. அச்சுதன்)







## மகோற்சவம்

கல்முனை ஸ்ரீ தரவை சித்தி விநாயகர் கோவிலின் வருடாந்த மகோற்சவம் பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, நேற்று முன்தினம் (05) ஞாயிற்றுக்கிழமை முத்துச்சப்பர வீதி ஊர்வலம் யானைகள் சகிதம், கல்முனை நகர் ஊடாக வலம் வந்தது. இதில் தமிழ் மக்களின் கலை, பண்பாட்டு அம்சங்களை பிரதிபலிக்கும் கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்த நிகழ்வில், கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் கே. கோபாலரட்ணம், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி. ஜெகதீசன், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜெ. அதிசயராஜ், தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் கே. குணராசா உட்பட ஆலயத்தின் பரிபாலன சபையினர், பக்த அடியார்கள் என ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

ஏ.எல்.எம் ஷினாஸ்











# யாழ்ப்பாணத்தில் இன்னும் பத்து ஆண்டுகளில், 50 பாடசாலைகள் மூட வேண்டியநிலை

■ எஸ். தில்லைநாதன்

இன்னும் பத்து ஆண்டுகளில், யாழ்ப்பாணத்தில் கிட்டத்தட்ட 50 பாடசாலைகள் மூட வேண்டிவரும் என சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் 'செஞ்சொற்செல்வர்' கலாநிதி ஆறு திருமுருகன் தெரிவித்தார்.

உரும்பிராய் ஞானவைரவர் சமூக அறக்கட்டளை சார்பில், உரும்பிராய் பகுதியை சேர்ந்த மாணவர்களுக்கான கல்வி உதவிகள் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை (04) உரும்பிராயில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு-கிழக்கு பகுதிகளில் இருக்கும் பெரிய பிரச்சினை சனத்தொகை குறைந்துள்ளமை ஆகும். அதனால் இன்னும் ஒரு பத்து ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் கிட்டத்தட்ட 50 பாடசாலைகள் மூடவேண்டி வரும் என கணிப்பு செய்யப்பட்டுள்ளது.

புங்குடுதீவு, வேலணை, அனலைதீவு போன்ற பகுதிகளில் பாடசாலைகள் மூடப்பட்டு வருகின்றன. போதாக்குறைக்கு தீவகத்தில், இன்டர்நஷனல் பாடசாலை ஒன்றை பெரிய அளவில் ஏற்பாடு செய்து, மதம் சார்ந்த பாடசாலை ஆக அனைவரையும் ஈர்க்கின்றார்கள். ஏற்கெனவே உள்ள பாடசாலைகளின் கதவு மூடப்படுகின்ற தறுவாயில், இன்டர்நஷனல் பாடசாலை திறக்கப்படுகிறது. இவ்வாறான நிலையில், தனியாரை தட்டிக் கேட்பதற்கு யாரும் இல்லாத நிலை காணப்படுகிறது.

அறச் சிந்தனையுடன் ஆரம்பிக்கப்படுகின்ற இந்த அறக்கட்டளை, முதலாவது கட்டத்தில் 50 இலட்சத்துக்கு மேல் பணி செய்துள்ளது. அடுத்த கட்டங்களில், இப்பகுதிகளில் மூடும் நிலையில் உள்ள பாடசாலைகளை மூடாமல் செய்ய என்ன வழி? அத்துடன் மருத்துவ உதவி, சமூகத்துக்கான அவசிய தேவைக்குரிய உதவி என அனைத்தையும் பகுதி பகுதியாகப் பிரித்து, வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு எதைச் செய்ய விருப்பமோ அவர்கள் அதை அபிவிருத்தி செய்யலாம்.

யாழ்ப்பாணத்தில் இருந்த அறக்கட்டளைகள் பல, பேணுவாரற்று கைவிடப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் செவ்வாய்கிழமை மடம், வெள்ளிக்கிழமை மடம், அன்ன சத்திர மடம், கீரிமலையில் இருந்த மடம் ஒன்றுக்கும் கோடிக்கணக்கில் அறக்கட்டளையில் பணம் இருந்தது. இப்பொழுது அந்தப் பணம் எங்கே என்று தெரியாது.

இன்று, அறக்கட்டளைகள் இருந்த இடங்களும் தெரியாது; மடங்களும் இல்லை. அவற்றைத் தேடிப் பார்த்தால், அங்கெல்லாம் கொத்து ரொட்டி கடைகள் உள்ளன.

யாழ்ப்பாணத்தில் இருபாலைச் சந்தியிலிருந்த செவ்வாய்க்கிழமை மடத்தில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் அன்னதானம் இடம்பெறும். ஆகவே, அறக்கட்டளைகள் நீண்ட ஆயுளோடு இருக்க, சிறந்த வாய்ப்புகளை உருவாக்கவேண்டும் என்றார்.

மதுறு ஓயா திட்டத்துக்கு நிதி வழங்கும் சர்வதேச நிறுவனமும்

# தமிழின சுத்திகரிப்புக்கு உடந்தையா?

## மயிலந்தனைமடு, மாதந்தனை மேச்சல்தரை விவகாரம்

■ கனகராசா சரவணன்



மட்டக்களப்பு - பொலன்னறுவை எல்லைப் பகுதியான மயிலந்தனைமடு, மாதந்தனை மேச்சல்தரை பகுதியில், சிங்கள மயப்படுத்தலுக்காக திட்டமிடப்பட்ட மதுறு ஓயா வலதுகரை திட்டத்துக்கு, தமிழ் பிரதேசத்தின் ஓர் அங்குலம் நிலம் கூட வழங்க முடியாது என்பதுடன், நிதி உதவி வழங்குகின்ற சர்வதேச நிறுவனங்கள் இதனை நிறுத்தவேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பொன்னம்பலம் கஜேந்திரகுமார் கோரிக்கை விடுத்தார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொன்னம்பலம் கஜேந்திரகுமார், செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் த. சுரேஸ் ஆகியோர் மயிலந்தனை, மாதந்தனை மேச்சல் தரை பகுதிக்கு ஞாயிற்றுக்கிழமை (05) விஜயம் மேற்கொண்டு, பண்ணையாளர்களை சந்தித்து அவர்களுடைய பிரச்சினைகளைக் கேட்டறிந்த பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

இந்தப் பிரதேச மேச்சல்தரை பகுதியில், கால்நடை பண்ணையாளர்களை அச்சுறுத்தி, மாடுகளை வெட்டி, அவர்கள் பரம்பரையாக வாழ்கின்ற மேச்சல்தரையில் இருந்து ஓடவைப்பதற்காக முழுமூச்சிலான திட்டம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மாதுறு ஓயா வலதுகரையை, சிங்களமயமாக்குதலுக்கான நோக்கத்தோடு இந்தப் பண்ணையாளருக்கு எதிராக நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, கிழக்கு மாகாண ஆளுநர், வனவளதிணைக்களம், மகாவலி அபிவிருத்தி சபை போன்ற அனைத்து கட்டமைப்புகளும் இங்குள்ள மேச்சல்தரை காணிகளை அபகரிப்பதில் உறுதியாக இருக்கின்றன. இந்தப் பிரதேசத்தில் தமிழ் விரோத நடவடிக்கைகள், சிங்கள விரோதிகளால் முன்னெடுப்பதை தடுக்க, நீதிமன்ற உத்தரவு ஒரு வருடத்துக்கு மேலாக இருக்கின்றது. எனவே, இந்த இனவாதிகள் எந்தளவுக்கு சட்டத்தையும் நீதியையும் மதிக்கின்றார்கள் என்பது தெட்டத்தெளிவாகின்றது.

எனவே, தமிழ் பிரதேசத்தை இன சுத்திகரிப்பு நடத்துவதற்கு ஏதுவான மதுறு ஓயா அபிவிருத்திக்கு, நிதி உதவி வழங்குகின்ற சர்வதேச நிறுவனங்களும் தமிழ் இன சுத்திகரிப்புக்கு உடந்தையாக இருக்கின்றன என்றே உணரவேண்டும்.

எனவே, இதைத் தடுத்து நிறுத்த, அந்த உதவி வழங்கும் நிறுவனங்களின் அலுவலகங்களுக்கு முன்னால், போராட்டங்களைச் செய்வதை தவிர, வேறு வழியில்லை. இந்தத் திட்டம், மக்களுக்குரிய அபிவிருத்தி வேலைத்திட்டமாக இருக்கவேண்டுமே தவிர, இந்த மக்களை அப்புறப்படுத்தி, அவர்களின் வாழ்வாதாரத்தை இல்லாமல் செய்து, ஓர் இனவழிப்புக்கு வழிசமைக்கின்ற முறையில் அமையக்கூடாது என்றார்.

# மதுபான பிரியர்களிடம் இருந்து மைதானத்தை பாதுகாக்கவும்

■ நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி, கண்டாவளை, புன்னைநீராவி நாதன் குடியிருப்பு பகுதியில் உள்ள பொது மைதானம், சமூக சீர்கேடுகளுக்கு பயன்படுத்தப்படுவதாக விளையாட்டு வீரர்களாலும் பொது மக்களாலும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மைதானத்தின் நிர்வாகம், விளையாட்டு வீரர்களை முழுமையாக விளையாட அனுமதிப்பதில்லை என்ற பிரதான குற்றச் சாட்டு எழுந்துள்ள நிலையில், மைதானத்தை நிர்வகிக்கின்ற விளையாட்டுக் கழகம், மூன்று வருடங்களாக இயங்காமல் உள்ளது எனவும்தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மைதானத்தை, தற்போது மது அருந்துபவர்கள் பயன்படுத்துவதால், மைதானத்தில் சாராயப் போத்தல்களும் பியர் ரின்களும் நிறைந்து காணப்படுகின்றன. இது தொடர்பாக, கிராம அலுவலருக்கும் விளையாட்டு உத்தியோகத்தரும் தெரியப்படுத்திய போதிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இந்த விளையாட்டு கழகத்தின் நிர்வாகத்தை நீக்கி, புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட வேண்டும் எனவும் மைதானத்தில் சமூக சீர்கேடுகளில் ஈடுபடுபவர்களைக் கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விளையாட்டு வீரர்களும் பொது மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கல்வி சமூகத்துக்கு விழிப்புணர்வு செயலமர்வு



■ க. அகரன்

வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட முஸ்லிம் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட கல்வி சமூகத்துக்கு விழிப்புணர்வு செயலமர்வு நேற்று (06) வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலய தேசிய பாடசாலையில் நடைபெற்றது.

வவுனியா தெற்கு வலய முஸ்லிம் பாடசாலை அதிபர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இச்செயலமர்வானது, வவுனியா தாரும் உலும் மகாவித்தியாலய அதிபர் கே. ஏம் அனீஸ் தலைமையில் வவுனியா தெற்கு வலய முஸ்லிம் பாடசாலைகளின் இணைப்பாளரும் இஸ்லாம் பாட ஆசிரிய ஆலோசகருமான அஷேக் ஏ. ஆர்.எம் ஜமீட்டின் வழிகாட்டலில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக, வவுனியா தெற்கு வலய கல்வி பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன் கலந்துகொண்டிருந்தார்.



# வலய கல்வி பணிப்பாளர்கள் கௌரவிப்பு



■ எச்.எம்.எம் பர்ஸான்

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி அதிபர் சங்கத்தின் ஏற்பாட்டில், வலயக் கல்விப் பணிப்பாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு, சனிக்கிழமை (04) கேணிநகர் மதீனா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அதிபர் சங்கத்தின் தலைவர் எம்.ஐ செயினுலாப்தீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மத்தி. கல்வி வலயத்தில் சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.எஸ் உமர் மௌலானா, மட்டக்களப்பு மத்தி. கல்வி வலயத்தில் புதிதாக கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட கல்வி பணிப்பாளர் எஸ். எம்.எம்அமீர் ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.ரீ அஜ்மீர், உதவிக் கல்வி பணிப்பாளர் ஏ.எம் ஜாபிர் கரீம், ஆசிரிய ஆலோசகர்களான எம். பி.எம் சித்தீக், எச்.எம் ஆதம் லெப்பை மற்றும் ஓட்டமாவடி கோட்டப் பாடசாலைகளின் அதிபர்களும் கலந்து கொண்டனர்.

# ஒரேவேளையில் சகோதரர்கள் சத்திர சிகிச்சை நிபுணர்களாகினர்



■ வீரி சகாதேவராஜா

காரைதீவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர், சத்திர சிகிச்சை நிபுணர்களாக (MD in Surgery) பட்டப் பின் பட்டம் பெற்றுள்ளனர். புதன்கிழமை (01) பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கொழும்பு பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் இவர்களுக்கான பட்டம் வழங்கப்பட்டது.

காரைதீவு -01 விபுலானந்த வீதியில் வதியும் டொக்டர் நடேசன் அகிலன், டொக்டர் நடேசன் பகீரதன் ஆகிய உடன்பிறந்த சகோதரர்கள் இருவர், ஒரே வேளையில் இம் மருத்துவ முதுமாணிப் பட்டம் பெற்றுள்ளனர்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த காரைதீவு மண்ணில் பல வைத்தியர்கள் உருவாகிய போதிலும், முதற்றடவையாக சகோதரர் இருவர் சத்திர சிகிச்சை நிபுணர்களாகி இருப்பது வரலாற்றில் முக்கிய மைல்கல் ஆகும்.

தற்சமயம், டொக்டர் நடேசன் பகீரதன் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் டொக்டர் நடேசன் அகிலன் கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையிலும் பணியாற்றி வருகின்றனர்.

டொக்டர் நடேசன் அகிலன் 2006ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர உயிரியல் பிரிவில், அம்பாறை மாவட்டத்தில் முதல் நிலை மாணவனாக தெரிவாகி சாதனை படைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாலைதீவில் நீர்வேளாண்மை அபிவிருத்தி

## அமைச்சர் டக்ளஸ் கள விஜயம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்



பூநகரி, பள்ளிக்குடா பிரதேசத்தைச் சேர்ந்த பாலைதீவு பகுதியில் நீர்வேளாண்மை உற்பத்திகளுக்கு பொருத்தமான இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கள விஜயத்தை ஞாயிற்றுக்கிழமை (05) மேற்கொண்டிருந்தார்.

பாலைதீவு அந்தோனியார் தேவாலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்ட அமைச்சர், புதன்கிழமை (08) பாலைதீவு அந்தோனியார் தேவாலத்தின் கொடியேற்றத் திருவிழா ஏற்பாடுகள் தொடர்பாக நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார்.

கடற்றொழிலாளர்களுக்கு மேலதிக வாழ்வாதாரத்தை வழங்கக்கூடிய, கடலட்டை, கடற்பாசி வளர்ப்பு போன்ற உற்பத்திகளை மேற்கொள்கின்ற தரப்புகள், கிடைக்கும் வருமானத்தின் ஒரு பகுதியை பிரதேசத்தின் வளர்ச்சிக்கும் பாலைதீவு அந்தோனியார் தேவாலய புனரமைப்புக்கும் திருவிழா கால செலவீனங்களுக்கும் பங்களிப்பு செய்ய வேண்டும் என கடற்றொழில் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

# 'கனவுல வாழுறேனே' கத்தாரில் வெளியீடு

■ நூருல் ஹுதா உமர்




வெளிநாட்டில் பணி செய்யும் மக்களின் வலிகளைச் சொல்லும் 'கனவுல வாழுறேனே' தனியிசைப்பாடல் வெளியிட்டு விழா ஸ்கை தமிழ் வலையமைப்பின் ஏற்பாட்டில் கத்தார் வொண்டர் பேலஸ் ஹோட்டலில், ஸ்கை தமிழ் பணிப்பளார் ஜே.எம் பாஸித் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 'கனவுல வாழுறேனே' பாடலின் ஆசிரியரும் தயாரிப்பாளருமான த. சண்முக பாண்டியன் பாடலை வெளியீட்டார். பாடலுக்காக பணியாற்றிய பாடல் இயக்குநர் செபஸ்டியன், இசையமைப்பாளர் மோகன் ராம், நடிகை இவள் நந்தினி, நடிகர் அரவிந்த் ஆகியோர் நிகழ்நிலைகாணொலி மூலம் நிகழ்வில் உரை நிகழ்த்தினர். 'கனவுல வாழுறேனே' பாடலை சாம் விஷால் பாடியுள்ளார்.

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் முகாமையாளர் அஸ்வர் ரிஸ்வி நெறிப்படுத்திய இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக கத்தார் தமிழர் சங்கத்தின் நிறுவனர் டொக்டர் துரைசாமி குப்பன், கத்தார் தமிழர் முன்னேற்ற சங்கத்தின் தலைவர் கௌரி சங்கர், தொழிலதிபர் யாழினி குமார், ஒருங்கிணைந்த தமிழர் பேரவை தலைவர் சமீர், கத்தார் தமிழர் முன்னேற்ற சங்கத்தின் பொதுச் செயலாளர் கார்த்திக் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

# மின்சாரம் தாக்கி இளைஞன் உயிரிழப்பு

■ செந்தூரன் பிரதீபன்

கட்டுவன் புலம் பகுதியில் மின்சாரம் தாக்கி, இளைஞன் உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் (05) இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர் தெல்லிப்பழையைச் சேர்ந்த எஸ், மாதுசன் வயது 18 என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேப்ப மரத்தின் கொப்புகளை வெட்டும் பொழுது, பிரதான மின்வடத்தில் இருந்து மின்சாரம் இவரை தாக்கி உள்ளது. மேலதிக விசாரணைகளை தெல்லிப்பழை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உரிய பிரதேச சபையே இழப்புக்கு பொறுப்பாகும்

எம்.கிருஸ்ணா



கொட்டகலை நகரத்தில் இடம்பெற்ற தீ விபத்தால் ஏற்பட்ட இழப்புக்கு குறித்த பிரதேசத்துக்கு உரிய பிரதேச சபையும் பொறுப்பு கூற வேண்டும் என முன்னாள் அமைச்சரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

தீயனைப்பு பிரிவுகள், நுவரெலியா மாநகர சபையிலும், ஹட்டன் நகர சபையிலுமே உள்ளன. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளடங்கலாக 12 உள்ளூராட்சி மன்றங்கள் இருந்தும் இரண்டில் மாத்திரம் இந்தத் தீயனைப்பு வசதிகள் காணப்படுகின்றமை அசாதாரணமானது. குறித்த சபைகளுக்கு தலைமையேற்கும் தவிசாளர்கள் இவ்வாறன விடயங்களில் கவனம் செலுத்துவதில்லை என்றார்.

இடங்களை கையப்படுத்துவதிலும், சுய வருமானமீட்டலிலும் அக்கறை செலுத்தும் தவிசாளர்கள் ஏன் இதற்கு அக்கறை செலுத்துவதில்லை. கடந்த 5 வருட சபை ஆட்சி காலத்தில், இதனை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இவ்வாறான வசதிகளை ஏற்படுத்தி பொதுமக்களுக்கு இத்தகைய சேவையினை வழங்குவதே சபைகளின் பொறுப்பாகும் என்றார்.



# கொட்டகலை தீயில் ரூ.3 கோடி நட்டம்

கொட்டகலை நகரில் ஏற்பட்ட தீயில் தளவாட கடை தொகுதியும், வீடும் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது என திம்புள்ள- பத்தனை பொலிஸார் தெரிவித்தனர். இந்தத் தீ ஞாயிற்றுக்கிழமை (05) இரவு 09.30 மணியளவில் பரவியுள்ளது.

திம்புள்ள- பத்தனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில், கொட்டகலை வூட்டன் பசார் பகுதியில் வீதிக்கு அருகாமையில் உள்ள ஒரே கட்டடத்தில் அமையப்பெற்றுள்ள தளவாட கடை மற்றும் வீடு ஆகியன முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளன.

திம்புள்ள- பத்தனை பொலிஸார், பிரதேசவாசிகள், நுவரெலியா மாநகர சபையினரின் தீயணைப்பு பிரிவினர், கொட்டகலை இராணுவத்தினர், இராணுவத்தின் தீயணைப்பு பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்தனர். சுமார் 4 மணித்தியாலயங்களுக்கு பிறகு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. எனினும் பொருட்கள் மற்றும் ஆவணங்கள் என அனைத்தும் தீக்கிரையாகியுள்ளன.

தீயணைப்பு படையினர் விரைந்து வந்திருந்தால் இந்தப் பாரிய அனர்த்தத்தை கட்டுப்படுத்திருக்கலாம் என பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

கொட்டகலை பிரதேச சபையில், தீயணைப்பு வாகனம் இல்லை என்பதால், கொட்டகலை பிரதேச சபை தவிசாளர் ராஜமணி பிரசாத், உடனடியாக நுவரெலியா மாநகர சபையினரின் தீயணைப்பு பிரிவினரை வரவழைத்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உதவியுள்ளார்.

தீக்கிரையாகிய இவை அனைத்தும் ஒரே உரிமையாளருக்கு சொந்தமானதாகவும், சம்பவம் இடம்பெற்ற வேளை உரிமையாளர் மற்றும் அவரின் மனைவி ஆகியோரே இருந்துள்ளதாகவும், எனினும் அவர்களுக்கு எந்தவித பாதிப்புகளும் ஏற்படாமல் காப்பாற்றியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தீயால் சுமார் 3 கோடி ரூபாய் பெறுமதியான பொருட்கள் எரிந்து சேதமாகியுள்ளதாகவும், தீ ஏற்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் திம்புள்ள - பத்தனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவம் இடம்பெற்ற போது, ஸ்தலத்திற்கு விரைந்த நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஷ்வரன் உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுத்ததோடு, இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் இடம்பெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கொட்டகலை பிரதேச சபைக்கு பணித்தார்.

## கொட்டகலையில் பகுதிநேர கடையடைப்பு

நிலமேகம் பிரசாந்த்



கொட்டகலை நகரில் ஞாயிற்றுக்கிழமை (05) இரவு ஏற்பட்ட தீ விபத்தின் போது தக்க தருணத்தில் தீயணைப்பு கருவிகள் இன்மையால், தீ ஏற்பட்ட கடையில் பொருட்கள் முற்றாக தீக்கிரையாகின.

எனவே, இனிவரும் காலங்களில் இவ்வாறான அசம்பாவிதங்கள் ஏற்படும் பட்சத்தில், கொட்டகலை பெற்றோலிய களஞ்சிய சாலையில் இருந்து தீயணைப்பு கருவிகளை வழங்குமாறு வலியுறுத்தி, கொட்டகலை ஐக்கிய வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் கொட்டகலை நகரத்தில் கடைகள் அனைத்தும் நேற்று (06) திங்கட்கிழமை பகுதிநேரமாக அடைக்கப்பட்டன.



## நாவல் நகரில் பந்தமேந்தி எதிர்ப்பு

மின்சார கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நாவலப்பிட்டிய நகரில், ஞாயிற்றுக்கிழமை (05) பந்தமேந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தேசிய மக்கள் சக்தியால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரஞ்சித் ராஜபக்ஷ)

## மனைவியின் மார்பில் கத்தியால் குத்திய கணவன்

தங்களுடைய மகனுக்கு சைக்கிள் வாங்கிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பும் வழியில் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை அடுத்து, மனைவியின் மார்பில், அவரது கணவன் கத்தியால் குத்தியுள்ளார்.

மொனராகலையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மனைவி, கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தங்களுடைய பிள்ளைக்கு சைக்கிள் வாங்குவதற்காக இவ்விருவரும் 25ஆம் திகதி, மொனராகலை நகர்த்துக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்த போதே, கணவனால் கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளார்.

சம்பவத்தை கேள்வியுற்ற பிரதேசவாசிகள் அவரை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். மேலதிக சிகிச்சைகளுக்காக கண்டி வைத்தியசாலைக்கு அவர் மார்ச் 3ஆம் திகதி மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய நபரை பொலிஸார் தேடிவருகின்றனர்.

## ஹட்டன் யுவதியை கட்டிவைத்து துஷ்பிரயோகம்

வீட்டுப் பணிப்பெண்ணாக வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த ஹட்டன் பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதான யுவதியொருவர் அந்த வீட்டின் எஜமானால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என மொரட்டுவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

60 வயது மதிக்கத்தக்க ஒருவரே அந்த யுவதியை கட்டிவைத்து மூன்று நாள்களாக துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

அவரது பிடியில் இருந்து தப்பிவந்த யுவதி, மொரட்டுவ பொலிஸ் நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணியளவில் முறைப்பாடு செய்துள்ளார்.

நோர்வூட்டைச் சேர்ந்த அந்த யுவதி, தரகர் மூலமாக, 20 நாள்களுக்கு முன்னரே அந்த வீட்டில் பணிப்பெண்ணாக வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்.

சந்தேக நபர், அவ்வப்போது அந்த யுவதியிடம் அங்க சேஷ்டைகள் செய்துவந்துள்ள நிலையில், அவ்வீட்டைச் சேர்ந்த ஏனைய அங்கத்தவர்கள் விடுமுறையை கழிப்பதற்காக வெளியில் சென்றுள்ளனர்.

சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கொண்டே, அந்த யுவதியை அச்சுறுத்தி, கட்டிவைத்து, துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார். வீட்டை விட்டு வெளியேறிய யுவதி, பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறையிட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

## “நாங்கள் போராடி பெற்றவை இன்று குறைந்து வருகிறது”

எஸ். கே. குமார்

மேலதிக தமிழ் கல்வி பணிப்பாளர் நியமனங்களை பற்றி ஊடகங்களில் பலர் பல்வேறு கருத்துகளை கூறிவருகின்றார்கள்.

இந்த மேலதிக தமிழ் கல்வி பணிப்பாளர் பதவி எவ்வாறு உருவாகியது என்பதை பற்றி ஒரு சிலருக்கு இன்னும் தெரியவில்லை என்று இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய சுப்பையா சதாசிவம் தெரிவித்தார்.

“நான் மத்திய மாகாணத்தில் தமிழ்க் கல்வி அமைச்சராக இருந்தபோது எவ்வாறு போராட்டம் நடத்தி மேலதிக தமிழ் கல்வி பணிப்பாளர்களை பெற்றோம் என்பது எங்களுக்குத்தான் தெரியும். மத்திய மாகாணத்திலும் ஊவா மாகாணத்திலும் தமிழ் கல்வி அமைச்சை, மறைந்த அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமானும் நானும் போராடிதான் பெற்றோம்” என்றார்.



அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் கருத்துதெரிவிகையில், மத்திய மாகாணத்தில் அன்று இருந்த ஆளுநர் இம்புலான, தமிழ் கல்வி அமைச்சை பிரித்துக் கொடுக்க முடியாதென கூறினார். அதற்கு முன்னர் அமரர் இராமநாதன், மத்திய மாகாணத்தில் தமிழ், சிங்களம் முழு கல்வி அமைச்சராக இருந்தார்.

அதற்கு பின் அந்த முழு அமைச்சை கேட்ட பொழுது அன்று மத்திய மாகாண முதலமைச்சராக இருந்த டபிள்யூ. பி.பி திஸாநாயக்க அந்த முழுக் கல்வி அமைச்சை வழங்க முடியாதென மறைந்த முன்னாள் அமைச்சர் சௌமிய மூர்த்தி தொண்டமானிடம் கூறியதையடுத்து, மத்திய மாகாண ஆளுநர் காரியாலயத்திற்கு முன்பாக போராட்டம் நடத்திய பின்னர் மறைந்த சௌமியமூர்த்தி தொண்டமானும் நானும் மத்திய அரசாங்கத்துடன் பேசி மத்திய மாகாணத்திற்கும் ஊவா மாகாணத்திற்கும் தமிழ் கல்வி அமைச்சை பெற்றோம் என்றார்.

அந்த காலத்தில் நாங்கள் போராடி பெற்ற உரிமைகள் தற்பொழுது குறைந்து வருவதையிட்டு கவலையாக இருக்கின்றது. இன்றைய பாராளுமன்ற உறுப்பினர்கள் அறிக்கை விடுகிறார்களே தவிர உரிமைகளை போராடி பெற்றுக் கொள்வதற்கு சக்தியுள்ளவர்களாக இல்லை. ஊடகங்களில் அறிக்கை விடுவதை விடுத்து, போராடி உரிமைகளை பெற்றெடுக்க வேண்டும் என்றார்.



## விழிப்புணர்வு

உலக புற்றுநோய் தினம் பெப்ரவரி நான்காம் திகதியாகும். புற்றுநோய் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டும் வகையில், நாடளாவிய ரீதியில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. புளத்கொஹுபிட்டிய சுகாதார வைத்திய அதிகாரிகளால் விழிப்புணர்வு பேரணி, புளத்கொஹுபிட்டிய காரியாலயத்தில் இருந்து வாராந்த சந்தை வரையிலும் நடத்தப்பட்டது.

## சான்றிதழ்கள் வழங்கி வைப்பு

ஏ.எம்.ஜலீல்

உக்குவளை பிராந்திய கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் பிரதேச தமிழ் மொழி மூல பாடசாலைகளில் தரம் 11 இல் கற்கும் மாணவர்களுக்கான வினா- விடை போட்டி நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இச்சங்கத்தின் ஸ்தாபகத் தலைவரும் முன்னாள் அதிபருமான எம்.நிஸ்பரின் வழிகாட்டலில் உக்குவளை அஜ்மீர் பாடசாலையில் நடைபெற்றது.

இதன்போது சமூகமளித்திருந்த இப்பாடசாலை அதிபர் எம்.சரூக், சட்டத்தரணி எம்.யாகூப் உட்பட முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டார்கள். நிகழ்வில் பிரமுகர்கள் உரையாற்றியதுடன் வினாவிடை போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பிரமுகர்கள் சான்றிதழ்கள்களும் வழங்கி வைத்தார்கள்.



# விபரீத முடிவுகளுக்கு எத்தனிப்பது பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது

ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு நாளும் எதோவொரு பிரச்சினைக்கு முகங்கொடுத்துக் கொண்டுதான் இருக்கின்றான். ஒன்றைப்பற்றியும் கவலையில்லாமல் கிடைப்பதை உண்டு, வேலையைப் பற்றி எவ்விதமான சிந்தனையும் இல்லாது, சதாகாலமும் சும்மா இருப்பவர்களுக்கு பிரச்சினைகளே இராது.

ஒருவர் பயணித்துக்கொண்டிருக்கும் பாதையில் எந்தவிதமான இடையூறுகளும் இல்லையேல், அவர் வேறொருவரை பின்பற்றிப் பயணித்துக்கொண்டிருக்கின்றார். இல்லையேல், புதிய முயற்சிகளில் இறங்காமல், கடிகாரம் போல, ஒரு வட்டத்துக்குள் மட்டுமே சுற்றிக்கொண்டு இருக்கின்றார் என்பதுதான் அர்த்தமாகும்.

வாழ்க்கையில் பிரச்சினைகள் ஏற்படவேண்டும்; அப்போதுதான் தீர்வுகளை நோக்கி பயணிக்கும் போது, பல்வேறான நெருக்குதல்களுக்கு முகங்கொடுப்போம்; புதிய அனுபவங்களை பெற்றுக்கொள்வோம். ஆனால், வாழ்கையே பிரச்சினையாகி விட்டால், அதற்கு தீர்வு காண்பது இலகுவான காரியமாகவே இருக்காது என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்.

நமது நாட்டு மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினையை, கொரோனாவுக்கு முன், கொரோனா காலம், கொரோனாவுக்கு பின் என மூன்று காலப் பகுதிகளாக பிரித்து ஆராயவேண்டும். அந்தந்த காலக்கட்டங்களில் தாங்கள் முகங்கொடுத்த பிரச்சினைகளை ஒரு படிப்பினையாகக் கொண்டு வாழ்க்கையை கொண்டுநகர்த்த வேண்டும்.

வேலை,வாய்ப்புகள் இன்றி வீடுகளுக்கு உள்ளேயே பலரும் முடங்கி கிடந்த காலமே கொரோனா காலமாகும். அதற்கு முந்திய காலத்தில் எவ்விதமான தூர நோக்கமும் கட்டுப்பாடுகள் இன்றியும் பலரும் செலவழித்து இருப்பர். கொரோனாவுக்கு பிந்திய காலம் சகலருக்குமே ஒரு படிப்பினையாக அமைந்துள்ளது.

செலவுகளை எவ்வாறு கட்டுப்படுத்துவது? பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளமையால் எவ்வாறு கட்டுக்கோப்புடன் வாழ்க்கையை கொண்டு செல்வது உள்ளிட்டவை பற்றி நன்றாக கற்றுத் தேர்ந்துகொண்டனர். அத்துடன், எதையும் சமாளிக்கும் திறமையை தங்களுக்குள்ளே பலரும் வளர்த்துக்கொண்டனர்.

எனினும், இன்னும் சிலர் தங்கி வாழ்வதைக் கைவிடவில்லை. இலவசமாக கிடைக்கும் பொருட்களுக்காக இன்னும் கையேந்தும் நிலைமையில் இருக்கின்றனர். ஓரடியேனும் முன்னோக்கி நகரவில்லை. இவ்வாறானவர்கள்தான், தங்களுடைய உயிர்களை மாய்த்துக்கொள்ளும் அளவுக்கு விபரீதமான தீர்மானங்களை எடுத்துவிடுகின்றனர்.

தாங்கள் மட்டுமன்றி, தங்களுடன் வாழ்வோரின் உயிர்களையும் பறித்தெடுப்பதற்கு முயலுகின்றனர். இவ்வாறான சம்பவங்கள், நாட்டின் பல பிரதேசங்களில் இடம்பெற்று வருகின்றன. குடும்ப பிரச்சினைகளுக்காக உயிரை மாய்த்துக்கொள்கின்றனர். இவை அறியாமையின் விளைவாகும்.

பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளமையால், பலருக்கும் வாழ்க்கையை கொண்டு செல்வது சிரமமாகும். எனினும், டொலருக்கு எதிராக, ரூபாயின் பெறுமதி வலுவடைந்துள்ளது. இதனால், பொருட்களின் விலைகள் குறைந்துள்ளன. தங்கத்தின் விலை குறைந்துள்ளது. இறக்குமதி செய்யும் ஏனைய அத்தியாவசிய பொருட்கள், மருந்துகளின் விலைகளை குறைப்பதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.

தமிழ் Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



உண்மையான மாற்றம்

# தேர்தலால் மட்டும் சாத்தியமா?

மொஹமட் பாதுஷா

உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், அதனை விரைவாக நடத்துமாறு கோரி ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் இடம்பெற்று வருகின்றன. அரசாங்கம் இப்போதைக்கு தேர்தலை நடத்துவதில்லை என்ற முடிவில் இருப்பதாகத் தெரிகின்றது.

கடந்த வருடம் இடம்பெற்ற 'அரகலய' மக்கள் எழுச்சியின் ஊடாகக் கூட, மக்கள் எதிர்பார்த்த 'மாற்றம்' நிகழவில்லை. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதைத் தவிர, பெரிதாக வேறு எதுவும் நடந்து விடவும் இல்லை.

நாட்டை இந்த நிலைக்கு இட்டுச் சென்றவர்கள் ராஜபக்ஷர்கள் என்று மாற்று அணியினர் சொன்னது உண்மையென்றால், 'அரகலய'வுக்குப் பிறகு அவர்கள் மீது சட்டம் தன் கடமையைச் செய்யவில்லை என்பது வினோதமானது.

அதுமட்டுமன்றி, கோட்டாபய அரசாங்கத்தில் பதவிகளை, அதிகாரங்களைச் சுகித்தவர்கள்தான் ரணில் ஆட்சியிலும் முக்கிய பங்கு வகிக்கின்றார்கள் என்பது இரகசியமல்ல!

இந்தப் பின்னணியில், இப்போது இடம்பெறுகின்ற ஆர்ப்பாட்டங்களால் அல்லது உள்நாட்டு, வெளிநாட்டு அழுத்தங்களால் பெரிதாக எதையும் சாதித்து விடலாமா என்பது நிச்சயமற்றது. மாறாக, அது ஒரு பலப்பரீட்சையாக மட்டுமே அமையும் எனலாம்.

இதையெல்லாம் தாண்டி, மிகக் கிட்டிய காலமொன்றில் தேர்தல் நடைபெற்று, அதன் மூலம் ஜனநாயகம் நிலைநாட்டப்பட வேண்டும். நாட்டின் அரசியல் கலாசாரமும், மக்களை மறந்த போக்கும், கட்டமைப்பும் மாற வேண்டும். மக்கள் எதிர்பார்த்த மாற்றத்துக்கான அடித்தளமாவது இடப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்புகள் எல்லோரிடமும் உள்ளன என்பது முக்கியமானது.

ஆனால், இலங்கை அரசியல் பெருவெளியில், இயங்கிக் கொண்டிருக்கின்ற கட்சிகள், அதன் வேட்பாளர்கள் மற்றும் அதில் செல்வாக்குச் செலுத்துகின்ற தரப்பினரைப் பார்க்கின்ற போது, இது எந்தளவுக்கு நடைமுறைச் சாத்தியம் என்பதை ஊகிக்க முடியாமலுள்ளது.

இந்த நாட்டின் அரசியலும் மக்களின் நல்வாழ்வும் பொருளாதாரமும் சீர்குலைந்து நாசமானதற்கு 'இவர்' முக்கிய காரணம் என்று கூற முடியுமே தவிர, 'இவர் மட்டும்தான் காரணம்' என்று யாரையும் சொல்ல முடியாது.

வளம் நிறைந்த ஒரு தேசம், இன்று நல்ல ஆளுகைக்காகவும் பொருளாதார வளர்ச்சிக்காகவும் நிதிக்காகவும் இறக்குமதி பொருட்களுக்காகவும் சிறந்த ஆட்சியாளர்களுக்காகவும் 'பிச்சைப் பாத்திரம்' ஏந்தி நிற்கின்றது என்றால், அதற்கு எல்லோரும்தான் காரணமாகின்றார்கள்.

ஆட்சியாளர்கள், பெருந்தேசிய கட்சிகளின் தலைவர்கள், தமிழ், முஸ்லிம் கட்சிகள், அதன் எம்.பிக்கள், ஆயுதக் குழுக்கள், பயங்கரவாதிகள், இனவாதிகள், மதவாதிகள், இந்தியா, சீனா, அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகள், மதத் தலைவர்கள், பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் என இந்தப் பட்டியல் நீளமானது.

ஏன், பொருத்தமில்லாத உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் முதற்கொண்டு உருப்படியற்ற ஆட்சியாளர்கள் வரை அனைவருக்கும் கண்ணைமூடிக் கொண்டு வாக்களித்த, இன்னும் வாக்களிக்கத் தயாராக இருக்கின்ற மக்களும் இந்த நாட்டில் ஏற்பட்ட பின்னடைவுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களே ஆவார்.

ஒரு தேர்தல் மூலம், இதில் ஓரிரு தரப்பினரை மட்டுமே மாற்ற முடியுமே தவிர, மற்றெல்லா பிரிவினரும் இந்தக் கட்டமைப்புக்குள் ஒட்டுண்ணியாக தொங்கிக் கொண்டுதான் இருப்பார்கள். அதனை நாம் கடந்த காலங்களில் பல தடவை கண்டிருக்கின்றோம்.

இதையெல்லாம் தாண்டி, அடிமட்டத்தில் இருந்து ஒரு முறைமை மாற்றத்தை ஆரம்பித்தால் மாத்திரமே, நீண்டகாலத்தில் அது நாடு தழுவிய ஒரு 'சிஸ்டம் சேன்ஜ்'ஆக வரும். வெறுமனே ஆட்சியாளர்களை மட்டும் மாற்றுவதால், இது நடந்து விடாது என்பதையும் நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

அதைச் செய்வதற்கான அதிகபட்ச சாதகமான களநிலை 2022 இல் ஏற்பட்டது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக இலங்கை சமூகம் அதையும் தவறவிட்டது என்பதுதான் வரவாறு.

இப்போது, நிதிப் பற்றாக்குறையை காரணம்காட்டி, உள்ளூராட்சி தேர்தலை சில மாதங்களுக்கு தாமதிப்பதற்கு அரசாங்கம் எத்தனிக்கின்றது. தேர்தல் உடனடியாக நடத்தப்படுவதன் மூலம் ஜனநாயகம் காக்கப்பட வேண்டும் என்ற குரல்கள் மறுபுறத்தில் எழுகின்றன.

மக்கள் வாக்களிப்பதற்கான ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்தும் வகையில், உரிய காலத்தில் தேர்தலை நடத்த வேண்டும் என்பது எல்லோரும் ஏற்றுக் கொண்ட விடயமாகும்.

ஆனால், ஜனநாயகம் பாதுகாக்கப்படுதல் என்பது வாக்களிப்போடு மட்டும் முடிந்து விடுகின்றதா? அதற்குப் பிறகு நடக்கும் மக்கள் விரோத செயல்களுக்கும் ஜனநாயகத்துக்கும் தொடர்பில்லையா என்ற கேள்விக்கு விடையென்ன?

அதேபோல், உடனடியாக உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்றால், இந்த நாட்டில் மக்கள் நலன் காப்பாற்றப்படும். மக்கள் நினைத்த மாற்றம் ஏற்படும் என்பதற்கு என்ன உத்தரவாதம் உள்ளது?

அரசாங்கம் சொல்வது போல, காலதாமதமாகி தேர்தல் நடத்தினாலும் ஜனநாயகம் காப்பாற்றப்படும். ஒரு சிறந்த கட்டமைப்பு அல்லது முறைமை மாற்றம் ஏற்படும் என்பதை எதனை அடிப்படையாக வைத்து நம்புவது? இவை எதற்கும் உத்தரவாதமில்லை.

இப்படியான அபூர்வங்கள் நடக்க வேண்டும் என்பது, மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பாகும். ஆனால், நடைமுறை யதார்த்தம் என்பது அவ்வாறு இருந்ததும் இல்லை; இருக்கப் போவவுமில்லை.

இதே குட்டையில் ஊறிய மட்டைகளுக்குத்தான் அதிகாரம் கிடைக்கப் போகின்றது. அல்லது, மக்கள் இன்னும் அவர்களுக்குத்தான் மாறி மாறி வாக்களிக்கப் போகின்றார்கள். இதற்கு ஒரு நல்ல உதாரணத்தை கூறலாம்.

அதாவது, தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு, தேர்தல் களம் கடுமையாக சூடுபிடித்திருந்தது. பரப்புரைகள் வானைப் பிளந்தன. வேட்பாளர்கள் வீடுவீடாகச் சென்றனர். வாக்குறுதிகளை மட்டுமன்றி பல வேட்பாளர்கள், வாக்காளர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களையும் வழங்கினர்.

வட்டார தேர்தலில் கூட, வெற்றி பெறுவது சிரமம் எனத் தெரிந்தவர்களும் உள்ளுக்குள் பாராளுமன்ற உறுப்பினராக கனவு கண்டு கொண்டிருந்தனர். எனவே, கடைசிக் கட்டத்தில் பணத்தைக் கொடுத்தாவது சில வாக்குகளை பெறும் திட்டம் அவர்களுக்கு இருந்தது.

பொய் வாக்குறுதியை, பொருளையோ, பணத்தையோ, கட்சி என்ற அடையாளத்தையோ காட்டி வாக்குகளைப் பெறும் எண்ணம் இருந்தது. முஸ்லிம் பிரதேசங்களில் இந்த நிலைமை அதிகமாக அவதானிக்கப்பட்டது. இது வழக்கமாக சிறியதும் பெரியதுமாக கடைப்பிடிக்கப்படும் உத்திதான்.

ஆனால், தேர்தல் தாமதமாகும் என்ற அறிவிப்பு வெளியானவுடன் 95 சதவீதமான வாக்காளர்களை களத்தில் காணக் கிடைக்கவில்லை. எல்லோரும் தமது சொந்த வாழ்வுக்கு திரும்பிவிட்டதாகத் தெரிகின்றது.

இப்போது தேர்தல் நடைபெறாதுதானே; எனவே நாம் ஏன் வீணாக நேரத்தையும் பொருளையும் இப்போதே செலவு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தின் வெளிப்பாடுதான் இது.

ஒருவகையில் பார்த்தால், இப்படிப்பட்ட பேர் வழிகளை மாநகர சபைகளுக்கு, நகர சபைகளுக்கு, பிரதேச சபைகளுக்கு அனுப்புவதற்காகவே நாம் தேர்தல் ஒன்றை வேண்டி நிற்கின்றோம். இவர்கள்தான் இன்னும் சில வருடங்களில் மாகாண சபைக்கு, பாராளுமன்றத்துக்கு மக்கள் பிரதிநிதியாகச் செல்லப் போகின்றார்கள்.

பிரதேச சபை உறுப்பினராவதற்குக் கூட பொருத்தமற்ற ஒருவருக்கு 69 இலட்சம் வாக்குகளை அளித்த இலங்கை மக்கள், மேற்குறிப்பிட்ட விதத்திலான உருப்படியற்ற, மக்களை ஏமாற்றுகின்ற வேட்பாளர்களைத்தான், தொடர்ச்சியாக மக்கள் பிரதிநிதிகளாக அதிகளவில் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

கடந்த காலங்களில் உள்ளூட்சி சபை உறுப்பினராக, மாகாண சபை உறுப்பினராக, எம்.பியாக, அமைச்சராக, பிரதமராக, ஜனாதிபதியாக பதவி வகித்தவர்கள், தாங்கள் செய்யத் தவறிய காரியங்களுக்காக, எவ்விதம் பொறுப்புக் கூறியுள்ளார்கள்; அல்லது, பிராயச்சித்தம் தேடியிருக்கின்றார்கள்?

பொதுமக்கள் உள்ளடங்கலாக, அரச உத்தியோகத்தில் இருக்கின்றவர்கள் தொடக்கம் அமைச்சுகளின் உயர் பதவிகளில் இருக்கின்றவர்கள் வரை, தமது சமூகக் கடமையை பொறுப்புடன் நிறைவேற்றத் தவறியமைக்காக எவ்விதம் தண்டிக்கப்பட்டுள்ளார்கள்?

எதுவுமே நடக்கவில்லை; நடக்கப் போவதும் இல்லை!

இந்த இலட்சணத்தில், இங்கே தேர்தல் சட்டங்களை மாற்றுவதாலோ, வட்டார முறைமையில் மாற்றத்தை கொண்டு வருவதாலோ, எல்லைகளை மீள நிர்ணயிப்பதாலோ, அரசியலமைப்பில் மாற்றத்தை கொண்டு வருவதாலோ, உடனடியாக அல்லது தாமதித்து வாக்கெடுப்பை நடத்துவதாலோ மட்டும் எதுவும் நடந்து விடாது.

உண்மையில், அடிமட்ட மக்கள் தொடக்கம், அதிகாரிகள் தொட்டு அரசியல் பிரதிநிதிகள் மற்றும் ஆட்சியாளர்கள் வரை எல்லா மட்டத்தில் உள்ளவர்களினதும் மனப்பாங்கு மாறாத வரை எது நடந்தாலும் அது உப்புச் சப்பான சடங்காக அமையுமே தவிர, நாட்டில் மக்கள் எதிர்பார்க்கும் உருப்படியான ஒரு மாற்றம் தொடக்கி வைக்கப்படாது என்பதுதான் யதார்த்தம் ஆகும்.



## வாழ்வியல் தரிசனம்

எந்த நாட்டில் நாம் வாழ்கின்றோமே, அந்த நாட்டுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும். அதற்காகத் தாய் நாட்டை மறக்க வேண்டியதில்லை. மனச்சாட்சிக்கு விரோதமானதாய், தாய் மண்ணை நிராகரிப்பது நன்றி மறந்த செயலாகும்.

எம்மவர்களில் அநேகர் வெளிநாடு சென்றதும் தங்கள் பிள்ளைகளை தாய் மொழியை அறவே மறப்பவர்கள் அதிகம். அத்துடன் எமது பாரம்பரிய கலாசாரத்தையும் மறந்தே விடுவது கவலைக்குரியது.

ஆயினும் அநேக பெற்றோர் வெளிநாட்டில் இருந்தும் தாய் மொழி அறிவை வளர்ப்பதுடன் கலை, கலாசாரப் பண்புகளையும் ஊட்டிவிடுகின்றனர்.

எனினும் அடுத்த தலைமுறைகளில் ஒரு சாரார் தொடர்ந்தும் காரசாரமான பாரம்பரியங்கள் மொழிகளை பின்பற்றுவார்களா என்பது சந்தேகம்தான்.

எனவே வெளிநாட்டில் வாழும் பெற்றோர்கள், அடிக்கடி தங்கள் தாய் நாட்டுக்கு வந்து, உறவுகளைச் சந்திப்பதும் ஆன்மிக விழாக்கள், பண்டிகைகளில் கலந்து கொண்டால் மிகவும் நல்லது.

உயர் கல்வியில் சிறந்துவிளங்கும் எம்மவர்கள் இசை, நடனம், விளையாட்டு போன்ற துறைகளில் சிறப்பாக இருந்து, தாய்நாட்டை மேன்மைப்படுத்துகின்றனர்.


இந்நிலை தொடர்ந்தால், வெளிநாடுகளில் வாழும் எமது பிள்ளைகள், உலகுக்கே முன்னுதாரண புருஷர்களாக இருப்பார்கள். பண்டைய பெருமைகளை வளர்த்திடுக!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

பள்ளிக்குடா இறங்குதுறையை

# அபிவிருத்தி செய்யுமாறு கோரிக்கை



பூநகரி, பள்ளிக்குடா இறங்குதுறை அபிவிருத்தி செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றது. இதனால் கடற்றொழிலுக்கு செல்லும் கடற்றொழிலாளர்கள் தமது படகுகளை கடலுக்கு கொண்டு செல்வதிலும் படகுகளை கரைசேர்ப்பதிலும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே, இப்பகுதியில் உள்ள இறங்குதுறையை அபிவிருத்தி செய்து தருமாறு இப்பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதாவது, கடலில் இருந்து கரையை வந்தடைவதற்கு அமைக்கப்பட்ட ஆழமான வாய்க்கால் பகுதி, மண் நிரவிக்காணப்படுகின்றது என்றும் இதனை ஆழமாக்கி தருமாறும் இப்பகுதி கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– யது பாஸ்கரன்



# அருகி வரும் சலவைத் தொழில்




பாலசிங்கம் நிர்மலா
ஊடகக் கற்கைகள் துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்




இலாபத்தை பெற்றுக் கொடுத்த சலவைக் கைத்தொழிலானது தற்காலத்தில் காணாமல் போகின்ற நிலைமையை காண முடிகின்றது. இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி அதிகரித்த காலகட்டத்தில் கைத்தொழில்கள் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து வருகின்றன. அந்த வகையில் தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சியால் மறைந்து போன தொழில்களில் ஒன்றுதான் இச் சலவைக் கைத்தொழில்.

ஆரம்ப காலத்தில் நம் முன்னோர்கள் அழுக்குப் படிந்த துணிகளை மூட்டைகளாகக் கட்டிக்கொண்டு ஆச்சங்கரைக்கும் குளக்கரைக்கும் சென்று துணிகளை துவைத்து வந்தனர். பின்னர் இதிலிருந்து மாறி ஒவ்வொரு பகுதிகளிலும் இருக்கும் சலவைத் தொழிலாளர்களிடம் துணிகளைக் கொடுத்து சலவை செய்து வந்தனர். ஆனால் விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக இந் நிலைமை மாறிக்கொண்டே வருகின்றது. ஐந்தாறு தலைமுறைகளாக தொடர்ந்து சலவைத் தொழில் மட்டுமே வாழ்க்கை என்று அங்கேயே பிறந்து, அங்கேயே வளர்ந்து, வாழ்ந்து வரும் குறிப்பிட்ட சமுதாய மக்களுக்கு இந்நிலைமை ஏமாற்றத்தைத் தந்துள்ளது.

ஒரு கிராமத்தில் சலவைத் தொழிலாளர்கள் ஒன்றிரண்டு பேரையே காண முடிகின்றது. வெயிலோ, மழையோ இரண்டுமே இவர்களுக்குத் தேவை. ஆனால் இரண்டுமே எல்லை மீறினால் இவர்களது வாழ்க்கை திண்டாட்டமாகிவிடும். கடந்த காலங்களில் துணிகள் சலவை செய்பவர்கள், சாயம் போடுபவர்கள், வெளுப்பவர்கள் அதிக அளவில் இருந்தனர். தற்காலத்தில் இளம் தலைமுறையினர் இவற்றினை விரும்பாததால் சலவைத் தொழிலானது தனது இறுதிக் கட்டத்தில் தவித்துக் கொண்டிருக்கின்றது.

தொழில்நுட்பம் வளர வளர கைத் தொழில்கள் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து வருகின்றன. பல தொழில்கள், அதன் கடைசி பரம்பரையினரின் கைகளில்தான் இருக்கின்றன.

தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சியால் சுருங்கி விட்ட பல தொழில்களில் ஒன்றுதான் சலவைத்தொழில். கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்குமுன், ஆங்கிலேயர் காலத்தில் சலவைத்துறைகள் அமைக்கப்பட்டன.

ஐந்தாறு தலைமுறைகளாக தொடர்ந்து சலவைத்தொழில் மட்டுமே வாழ்க்கை என்று அங்கேயே பிறந்து, அங்கேயே வளர்ந்து, வாழ்ந்து வரும் ஒரு குறிப்பிட்ட சமுதாய மக்கள், எவ்வளவு தலைமுறைகளானாலும் தங்கள் வாழ்வில் பெரியளவில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்கிறார்கள்.

வெயிலோ, மழையோ இரண்டுமே இவர்களுக்குத் தேவை. ஆனால், இரண்டும் எல்லை அளவை மீறினால் இவர்களது அன்றாட வாழ்க்கை திண்டாட்டமாகிவிடும்.

முன்னாடி இருந்த அளவிற்கு இப்போது தொழில் இல்லை என்றும், தங்கள் பிள்ளைகள் எல்லாம் படித்துவிட்டு வேறு வேலைக்கு போய் விட்டதாகவும் அங்குள்ளவர்கள் கூறுகின்றனர்.

இப்ப எல்லார் வீட்டிலையும் வொஷிங் மெஷின் இருக்கு. அவங்களே துணிகளை எல்லாம் துவச்சிக்கறாங்க. அதனால எங்களுக்கு துணிகள் வரதில்லை" என்று தொழில்நுட்பம் சலவைத் தொழிலை சுருக்கி விட்டது

சலவைக்குத் துணிகள் இன்றி சலவைத் தொழிலாளிகள் பிற தொழில்களிற்குச் செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந் நிலையில் சலவைத் தொழிலாளி ஒருவர் தங்கள் தொழில் நலிவடைந்த காரணம் பற்றி இவ்வாறு குறிப்பிடுகின்றார். நாங்கள் இருபது ஆண்டுகளாகச் சலவைத் தொழில் செய்து வருகின்றோம். ஒரு துணியைச் சலவை செய்து வெளுத்துக் கொடுப்பதற்கு ஆரம்பத்தில் 15ரூபாய் தொடக்கம் 20 ரூபாய் வரை வாங்கினோம். இப்பொழுது 60 ரூபாய் தொடக்கம் 80 ரூபாய் வரை எடுக்கின்றோம். தற்காலத்தில் சலவைக்குத் துணிகள் வராத காரணத்தால் எமது தொழிலானது அருகி வருகின்றது. வீட்டிற்கு வீடு சலவை இயந்திரப் பாவனையும் எமது தொழில் பாதிப்படையக் காரணமாக இருக்கின்றது. இப்பொழுது ஆங்காங்கே சலவைக் கடைகளின் வருகையினால் எமக்கு தொழில் இல்லாமல் போய்விட்டது.

சலவைத் தொழிலானது இன்னும் ஐந்து வருடங்களில் இல்லாமல் போய்விடும். எங்களது தலைமுறையினர் படித்து நல்ல வேலைகளில் இருப்பதால் இந்தப் பக்கம் எட்டிப் பார்க்க மாட்டார்கள் என்று கூறினார். நமது பிள்ளைகள் நல்ல வேலையில் இருக்க வேண்டும் என்றே தானும் விரும்புவதாக கூறினார். தற்போது சலவைத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் மூத்தவர்களுடன் சலவைத் தொழிலும் முடிவுக்கு வருவதைப் பொறுத்திருந்து காண முடியும்.

# எனது 8 வயதில் தந்தை பாலியல் துஷ்பிரயோகம் புரிந்தார் -குஷ்பு



தனது 8 வயதில் தந்தையால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளானதாக பிரபல நடிகையும், பாரதிய ஜனதா கட்சியின் தமிழக நிர்வாகியுமான குஷ்பு தெரித்துள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரபல ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "ஒரு குழந்தை துஷ்பிரயோகம் செய்யப்படும்போது, அது குழந்தையின் வாழ்நாள் முழுவதும் வடுவாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

எனது தாயார் மிகவும் மோசமான திருமண வாழ்க்கையை அனுபவித்துள்ளார். எனது தந்தை தன் மனைவியை அடிப்பதும், குழந்தைகளை அடிப்பதும், தன் ஒரே மகளை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்வதும் தன் பிறப்புரிமை என நினைத்துக் கொண்டிருந்த ஒரு மனிதன். அவர் எனக்கு பாலியல் தொல்லை தொடங்கியபோது எனக்கு 8 வயதுதான். 15 வயதில் அவருக்கு எதிராகப் பேசும் தைரியம் எனக்கு இருந்தது.

ஆனால் குடும்பத்தினர் என்ன சொல்வார்களோ என்ற பயம் இருந்ததால், பல ஆண்டுகளாக வாயை மூடிக்கொண்டு இருந்தேன். என் அம்மா என்னை நம்பவில்லை. ஆனால் 15 வயதில் அது போதும் என்று நினைத்து அவருக்கு எதிராக பேச ஆரம்பித்தேன்.

எனக்கு அப்போது 16 வயது கூட ஆகவில்லை. எங்களை நிர்கதியாக விட்டு சென்றார். அடுத்த உணவு எங்கிருந்து வரும் என்று எங்களுக்குத் தெரியவில்லை. இதுபோன்ற பல சம்பவங்கள் என்னை சிறுவயதிலேயே மன உறுதியை படைத்தவளாக மாற்றியது" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




## அமெரிக்கா
## இந்திய மாணவருக்கு விமானங்களில் பயணம் செய்யத் தடை

நியூயோர்க்கில் இருந்து டெல்லி வந்த அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில் சக பயணி மீது இந்திய மாணவர் ஒருவர் சிறுநீர் கழித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மதுபோதையிலேயே குறித்த மாணவர் இவ்வாறு செய்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் இதுகுறித்து அமெரிக்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில், "நியூயோர்க்கில் இருந்து டெல்லி வந்த அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில் ஆர்யா வோஹ்ரா என்ற இந்திய மாணவர் அதிக போதையில் இருந்ததாகவும், விமானப் பணியாளர்களின் அறிவுரைகளை கேட்கவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து விமானப் பணியாளர்கள் மற்றும் விமானத்தின் பாதுகாப்பிற்கு ஆபத்தை ஏற்படுத்தினார் என்றும், சக பயணி மீது சிறுநீர் கழித்தார் எனவும், இதனால் குறித்த மாணவருக்கு தங்கள் விமானத்தில் பயணம் செய்யத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்நிறுவனம் கூறியுள்ளது.

இதேபோல் குறித்த மாணவர் மீது அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் சட்டரீதியில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் டெல்லிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மகாராஷ்டிரா
## 300 ஆண்டுகளாகக் கதவுகளே இல்லாத வீடுகள்

மகாராஷ்டிராவில் உள்ள 'ஷனி ஷிங்னாபூர்' என்ற கிராமத்தைச் சேர்ந்த மக்கள் கடந்த 300 ஆண்டுகளாகக் கதவுகள் இல்லாமல் வாழ்ந்து வருகின்றமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக இக்கிராமத்தில் உள்ள வீடுகள், அலுவலகங்கள், கோவில்கள், வங்கிகள் உட்பட எந்த கட்டிடங்களுக்கும் கதவுகள் இல்லை எனக் கூறப்படுகின்றது.

அதே சமயம் இக்கிராமத்தில் எவ்வித கொள்ளைச் சம்பவங்களும் இதுவரை இடம்பெறப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. 300 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற ஒரு சம்பவம் காரணமாகவே அவர்கள் இவ்வாறு கதவுகள் இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது கடந்த "300 ஆண்டுகளுக்கு முன்னர் குறித்த கிராமத்தில் உள்ள பனஸ்னலா நதி பெருக்கெடுத்து வெள்ளமாக ஓடியதாகவும், அப்போது அதில் கருங்கல் ஒன்று தென்பட்டதாகவும், அன்றைய இரவே ஊர்த்தலைவரின் கனவில் சனி பகவான் தோன்றி "அக்கருங்கல் தான் என் சிலை. அதை வைத்து வழிபடுங்கள். நான் உங்கள் ஊரை காப்பாற்றுகிறேன். ஆனால் அதற்கு ஒரு நிபந்தனை, என்னை கூரை வைத்த கோவிலில் வைக்க கூடாது. கதவுகள் வைத்து என்னை அடைக்க கூடாது. விசாலமாக திறந்து வையுங்கள். உங்களின் பாதுகாப்பை

## பீகார்
## மணமகனின் உயிரைப்பறித்த DJ

பீகாரில் நடந்த திருமண நிகழ்வு ஒன்றில், அளவுக்கு அதிகமான சத்தத்தோடு பாட்டு இசைக்கப்பட்டதால், மணமேடையிலேயே மயங்கி விழுந்து மணமகன் உயிரிழந்துள்ள சம்பவம், அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சுரேந்திர குமார் என்பவருக்கு கடந்த புதன் கிழமை திருமணம் நடைபெற்றுள்ளது. இந்நிலையில் இத்திருமணத்தின்போது DJவினால் தொடர்சியாகப் பாடல்கள் இசைக்கப்பட்டுள்ளன.

அப்போது, ஆரம்பம் முதலே பாட்டின் சத்தம் அதிகமாக இருப்பதாக மணமகன் சுரேந்திர குமார் தெரிவித்து வந்துள்ளார்.

தொடர்ந்து பாட்டுகளை இசைத்துக்கொண்டிருந்த டிஜேவிடம் சத்தத்தை குறைக்குமாறு தெரிவிக்கப்பட்டது. எனினும் சத்ததை குறைக்காமலேயே இருந்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில் எதிர்பாராத விதமாக மணமக்கள் மாலை மாற்றிக்கொண்ட பிறகு அவர் திடீரென மயங்கி விழுந்திருக்கிறார்.

அதிர்ச்சியடைந்த இரு குடும்பத்தினரும் அவரை உடனடியாக மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றனர். ஆனால், மருத்துவர்கள் சுரேந்திர குமார் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்திருக்கின்றனர். அதிகபடியான சத்ததால் ஏற்பட்ட அதிர்ச்சியின் காரணமாக அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் மணமேடையில் மயங்கி விழுந்து மாப்பிள்ளை உயிரிழந்துள்ள சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## பெங்களூர்
## ஆண்களின் கடவுளானார் எலோன் மஸ்க்

உலக செல்வந்தர்கள் வரிசையில் முதலாம் இடத்தில் உள்ளவரும்,டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகரும், அதன் தலைமை செயற்பாட்டு அதிகாரியுமான எலோன் மஸ்க் (Elon musk) அண்மையில் டுவிட்டர் நிறுவனத்தைக் கைப்பற்றியிருந்தார்.

இந்நிலையில்பெங்களூரில் இயங்கிவரும் ஆண்களுக்காக நடத்தப்படும் 'சேவ் இந்தியா பேமிலி பவுண்டேஷன்' என்ற தனியார் அமைப்பைச் சேர்ந்த சிலர் எலோன் மஸ்க்கைக் கடவுளாக நினைத்து அவருக்கு பூஜைசெய்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




இது குறித்து அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் " எலோன் மஸ்க், பெண்ணியவாதிகளை அழிப்பவர் என்பதாலும், ஆண்கள் தங்கள் மனங்களில் நினைப்பதை சுதந்திரமாக பேச வழிவகை செய்தவர் என்பதாலும் அவரை கடவுளுக்கு நிகராக நினைத்து பூஜை செய்து வருகின்றோம்" என்றனர்.

இந்நிலையில் எலோன் மஸ்கிற்கு பூஜை செய்யப்படும் வீடியோவானது இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகின்றது.

## கர்நாடகா
## மணப்பெண்ணின் மேக்-அப்பால் திருமணத்தை நிறுத்திய மணமகன்

மணப்பெண்ணின் முகம் மேக்கப்பால் மாற்றமடைந்ததால், ஆத்திரமடைந்த மணமகன் திருமணத்தை நிறுத்திய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடக மாநிலம் ஹசன் மாவட்டத்தில் உள்ள அரசிகிரா என்ற பகுதியைச் சேர்ந்த இளம் பெண் ஒருவருக்கு சமீபத்தில் திருமணம் நிச்சயமாகியுள்ளது.

திருமணத்திற்கு 10 நாட்கள் இருந்த நிலையில், தன்னை அழகு படுத்திக்கொள்ள வேண்டும் என அருகில் இருந்த என்ற அழகு சிகிச்சை நிலையத்திற்கு அவர் சென்றுள்ளார்.

இந்நிலையில் அப்பெண்ணிடம் அழகுக் கலை நிபுணர் "தான் புதுவகை மேக் அப் ஒன்றை



கற்று வைத்துள்ளதாகவும் அதனை? அவரிடம் முயற்சி செய்து பார்க்கவா எனக் கேட்டதாகவும் அதற்கு அவர் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் இதன்ஒரு பகுதியாக மணப் பெண் நீராவியில் ஆவி பிடித்துள்ளபோது அவரது முகம் திடீரென வெந்துபோகவே அதிர்ச்சியடைந்த மணப்பெண், உடனடியாக மருத்துவமனைக்குச் சென்றுள்ளார்.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# யுனைட்டெட்டைத் தோற்கடித்த லிவர்பூல்

இங்கிலாந்து காற்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மன்செஸ்டர் யுனைட்டெட்டுடனான போட்டியை 7-0 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வென்றது.

லிவர்பூல் சார்பாக, மொஹமட் சாலா, கோடி கக்போ, டர்வின் நுனேஸ் ஆகியோர் தலா இரண்டு கோல்களைப் பெற்றதோடு, றொபேர்ட்டோ பெர்மினோ ஒரு கோலைப் பெற்றார்.

இதேவேளை, நொட்டிங்ஹாம் பொரெஸ்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் சமப்படுத்தியது.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 63 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் ஆர்சனல் உள்ளது. 58 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியும், 49 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் மன்செஸ்டர் யுனைட்டெட்டும், 45 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரும் காணப்படுகின்றன. இதில் யுனைட்டெட் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.



பஹ்ரேய்ன் குரான் பிறீ:

## வெற்றியைத் தொடரும் வெர்ஸ்டப்பன்

பஹ்ரேய்ன் குரான் பிறீயானது நேற்று முன்தினம் நடைபெற்ற நிலையில் நடப்பு போர்மியுலா வண் சம்பியனான மக்ஸ் வெர்ஸ்டப்பன் வென்றார்.

பந்தயத்தை முதலாமிடத்திலிருந்து ஆரம்பித்து றெட் புல் அணியின் வெர்ஸ்டப்பன் வென்ற நிலையில், பந்தயத்தை இரண்டாமிடத்திலிருந்து ஆரம்பித்த வெர்ஸ்டப்பனின் சக றெட் புல் அணி ஓட்டுநரான சேர்ஜியோ பெரேஸ் இரண்டாமிடத்தைப் பெற்றதோடு, பந்தயத்தை ஐந்தாமிடத்திலிருந்து ஆரம்பித்த அஸ்தன் மார்டின் அணியின் பெர்ணாண்டோ அலோன்ஸோ மூன்றாமிடத்தைப் பெற்றார்.



கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்கத் தொடர்:

## சம்பியனான திருகோணமலை சண்முகா

அ. அச்சுதன்

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையில் திருகோணமலையில் அண்மையில் நடைபெற்ற சதுரங்கத் தொடரில் திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் தேசிய பாடசாலை சம்பியனாகியது.



கால்பந்தாட்ட சம்மேளன தலைவர் வெள்ளிக் கிண்ணத் தொடர்:

## சம்பியனானது ஸ்கிறாப் சண்பேட்ஸ்


ஆ. ரமேஸ்

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் வெள்ளிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் ஸ்கிறாப் சண்பேட்ஸ் அணி சம்பியனானது.

நுவரெலியா கால்பந்தாட்ட சங்கத்தால் நுவரெலியா மாநகர சபை மைதானத்தில் நடாத்தப்பட்ட இத்தொடரின் இறுதிப் போட்டியில் மூன் பிளேன் அணியை 4-2 என்ற கோல் கணக்கில் வென்றே சண்பேட்ஸ் சம்பியனானது.

ஸ்பானிய லா லிகாத் தொடர்:

## சமநிலையில் மட்ரிட் பெட்டிஸ் போட்டி



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகா தொடரில், றியல் பெட்டிஸின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான றியல் மட்றிட் சமப்படுத்தியது.

இதேவேளை, தமது மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வலென்சியாவுடனான போட்டியை 1-0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வென்றது.

லா லிகா புள்ளிகள் பட்டியலில் 62 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் பார்சிலோனா உள்ளது. 53 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் றியல் மட்றிட்டும், 45 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் அத்லெட்டிகோ மட்றிட்டும், 44 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் சொஸைடட்டும் உள்ளன.

அமெரிக்கா

# உக்ரேன்–ரஷ்யப் போரை என்னால்தான் நிறுத்த முடியும்: ட்ரம்ப்

அமெரிக்காவில் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று வருகின்றது.

அந்தவகையில் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பில் மீண்டும் போட்டியிடவுள்ளதாக கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அந்நாட்டின்முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் உக்ரேன்-ரஷ்யா இடையே நடைபெற்று வரும் போரைத் தன்னால் மாத்திரமே தடுக்க முடியும் என டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் ”இப் போரை தற்போதைய அமெரிக்க அரசு சரியாக கையாளவில்லை. நான் ஜனாதிபதியாக இருந்திருந்தால் இப்போர் ஏற்பட்டிருக்காது, போர் ஏற்படும் சூழ்நிலை தெரிந்து இருந்தால் 24 மணி நேரத்தில் சண்டை ஏற்படாமல் தீர்த்து வைத்திருப்பேன்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

மலேசியா




## 9 ஆண்டுகளுக்கு முன் மாயமான விமானம்

### மீண்டும் தேடுமாறு கோரிக்கை

9 ஆண்டுகளுக்கு முன் மர்மமான முறையில் மாயமான மலேசியன் எயார்லைன்ஸ் விமானத்தை மீண்டும் தேடுவதற்கு அனுமதிக்குமாறு காணாமல் போனவர்களின் குடும்பத்தினர் மலேசிய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 2014ஆம் ஆண்டு கோலாலம்பூரில் இருந்து பெய்ஜிங் சென்ற ‘MH370 ‘என்ற விமானமே திடீரென மாயமானது. இதனையடுத்து மலேசியா, சீனா மற்றும் அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் நடத்திய தேடுதல் வேட்டையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

அதே சமயம் அமெரிக்காவைச் சேர்ந்த ஓஷன் இன்ஃபினிட்டி என்ற நிறுவனமும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டது.

இந்நிலையில் குறித்த விமானத்தில் பயணம் செய்தவர்களின் உறவினர்கள்மீண்டும் தேடலைத் தொடங்க ஓஷன் இன்ஃபினிட்டி நிறுவனத்தை அனுமதிக்க வேண்டும் என்று மலேசிய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

ரஷ்யா





ஊட்டச்சத்துப் பானத்திற்காக

## சொகுசு காரை உடைத்த யூ-டியூபர்

ஊட்டச்சத்து பானமொன்றை பிரபலபடுத்தும் நோக்கில், இலங்கை மதிப்பில் சுமார் 14.6 கோடி ரூபாய் மதிப்பிலான ‘Lamborghini Urus‘ காரை ரஷ்யாவைச் சேர்ந்த யூ-டியுப்பர் ஒருவர் உடைத்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மிகேல் லிட்வின் (Mikhail Litvin) என்ற 23 வயதான இளைஞரே ‘Lit Energy ‘ என்ற ஊட்டச்சத்து பானத்தைப் பிரபலபடுத்த குறித்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

அந்தவகையில் கிரேன் மூலம் குறித் ஊட்டச்சத்து பானம் நிரப்பப்பட்ட மிகப்பெரிய கொள்கலனை மேலே தூக்கி, பின்னர் கார் மீது விழச்செய்து, அதனை வீடியோவாக எடுத்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்துள்ளார்.

இந்நிலையில் அவரது நடவடிக்கைக்கு பலரும் தமது கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

கொலம்பியா



## 60 நீர் யானைகளை நாடு கடத்தும் கொலம்பியா

மறைந்த போதைப் பொருள் கடத்தல் மன்னன் பாப்லோ எஸ்கோபரால் வளர்க்கப்பட்ட நீர்யானைகளை இந்தியாவுக்கு அனுப்ப கொலம்பிய அரசு திட்டமிட்டுள்ளது.

கடந்த 1993ஆம் ஆண்டு எஸ்கோபர் இறந்த பின்னர் அவரது பண்ணை வீட்டில் இருந்த ஏராளமான விலங்குகள் இடமாற்றப்பட்டன.

இதில் நீர்யானைகள் மாத்திரம் அங்கேயே இருந்த நிலையில், தற்போது அதன் எண்ணிக்கை 160ஆக உயர்ந்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

இவ் எண்ணிக்கை அடுத்த 20 ஆண்டுகளில் 1,500ஐக் கடக்கலாம் என்று கூறும் அதிகாரிகள், இதன் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த 60 நீர்யானைகளை இந்தியாவுக்கும், 10 நீர்யானைகளை மெக்ஸிகோவுக்கும் அனுப்பி வைக்க முடிவு செய்துள்ளனர்.

பிரித்தானியா



## நாயைத் திருமணம் செய்துகொண்டு ஓடிய நபர்

பிரித்தானியாவில் அண்மையில் மனைவிகளைத் தூக்கிக் கொண்டு கணவர்கள் ஓடும் விநோதமான போட்டியொன்று நடைபெற்றுள்ளது.

டோர்கிங் பகுதியில் நடைபெற்ற இப்போட்டியில் பெரும்பாலான கணவர்கள் தங்களது மனைவிகளை குழந்தையைப் போன்று தோளில் சுமந்தவாறு வேகமாக ஓடினர்.

இந்நிலையில் குறித்த போட்டியில் பங்கேற்ற ஒருவர் தனது கையில் நாய்க்குட்டியொன்றைத் தாங்கியவாறு ஓடிய சம்பவம் மக்கள் மத்தியில் நகைப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர் ” தான் தனது நாயைத் திருமணம் செய்து கொண்டமையினாலேயே இவ்வாறு நாயைத்தூக்கிக்கொண்டு ஓடியதாக அவர் தெரிவித்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 07 மார்ச் 2023, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.